# தென்மொழி

## செத்துவிட்ட வடமொழி எதற்கு?
## செந்தமிழிலேயே வழிபாடு செய்வீர்!

வழங்குதமிழ் மொழியிருக்க வழங்கி டாத
வடமொழியில் வழிபாடு செய்கின் றீர்கள்!
பழங்கதையில் குரங்கினமாய்ப் பார்ப்பா னுக்கே
பாதங்கள் தாங்குகின்றீர்! அடிமை யுற்றீர்!
புழங்குகின்ற தமிழ்மொழியில் இறைவ னுக்கே
போற்றிசெயும் திருப்பாடல் கோடி யுண்டு!
முழங்கிடுவீர் அவற்றினையே' விளங்கி டாத
மூடமொழி நமக்கெதற்கு? விலக்கு வீரே!

செந்தமிழைப் போற்றாமல்—மனங்கொள் ளாமல்—
செத்தசமற் கிருதத்தில் பொருள்கா ணாத
மந்திரங்கள் பலசொல்லி வழிபா டாற்றி
மகிழ்கின்றீர்! தன்மானம் துறந்து விட்டீர்!
தந்திரஞ்செய் பார்ப்பானின் கைச்சோற் றுக்கே
தமிழினத்தை அடகுவைத்தீர்! இனிமே லேனும்
சிந்தனைசெய் தும்மொழியை உம்மினத்தைச்
சிறப்புறவே காத்திடற்கு முனைகு வீரே!


சுவடி : 17
ஓலை : 5
ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்
விலை
உருபா 1-2


www.thamizham.net - Free E book No 7506

# நமக்கு வந்த மடல்கள்.

**0:820:** பேரன்பு கெழுமிய தமிழ்ப் பாவலரேறு அவர்களுக்கு வணக்கம். இத் திங்கள் தென்மொழி வழி செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலித் தொகுப்புப் பணிகள் முடங்கிக் கிடப்பதாக அறிந்து கண் கலங்கினேன்; உளம் நொந்தேன். மொழியியல் பேரறிஞர் ஒருவர் தம் தாய்மொழிக்கு ஆற்ற வேண்டிய இன்றியமையாச் சிறப்பான கடமைகளை விட்டுத் திசை திரும்பிச் செல்வதா? எனவே அவரை நல்லாற்றுப் படுத்தத் தாங்கள் ஒருவரால் தான் இயலும். ஆகவே, நீவிர் உடன் தலையிட்டு மேலும் செ. சொ. பி. பேரகரமுதலி தொகுக்கும் ஆக்கப் பணிகளை முடுக்கிவிடுமாறு தமிழ் நெஞ்சுடன் விழைகிறேன். —தமிழவேள், பழங்கரை.

**0:821:** பெருமதிப்பிற்குரிய ஐயா, சென்ற இதழில் 'பாவாணர் அகரமுதலித் திட்டத்தின் நலிவுகள்' பற்றித் திரு. நா. இளமாறன் எழுதியிருப்பதைப் படித்து மனம் வெதும்பினேன். தமிழ்த்தாயே! இச் செய்திகள் யாவும் பொய்யாய் இருக்கக் கூடாதா? 'எனக்கு வறுமையுமுண்டு மானமும் உண்டு' என்று முழங்கியவரா பொருளாசை கொண்டு செ. சொ. பி. அகரமுதலித் திட்டத்தைக் காலந் தாழ்த்தி முடிக்க விருக்கிறார். ஐயகோ! ஊழே, ஊழே தமிழினத்தை என்ன செய்ய நினைக்கிறாய்? தாயைக் காக்கவேண்டிய தனயனே இவ்வாறு செய்யலாமா? இருக்காது.... இருக்காது எங்கள் பாவாணர் எங்களையும் எங்கள் தமிழையும் காவாது தந்நலம் பேண மாட்டார். திராவிட இனம் இரு கூறாகப் பிரிந்து ஒன்று மற்றொன்றை அழிக்க விருக்கும் இந்நாளில் தனித் தமிழினமும் இரு கூறாகப் பிரிந்து ஒன்றோடு மற்றொன்று மோதுவதா? தமிழினம் உய்யவே வழியில்லையா? இனியார் எங்களுக்கு வழிகாட்டி?


—தமிழநேயன், தலைவர் தனித்தமிழ்க் கழகம், புதுச்சேரி-9.

**0:822:** பெருந்தகை பாவலரேறு ஐயா, வணக்கம். சுவடி 17, ஓலை 4 இன் ஆசிரிய உரை அருமையிலும் அருமை. அக மகிழ்ந்தேன். தென்மொழி கருத்துகள் பெருமளவு திராவிட இயக்கங்களுக்கும், பொதுவுடைமை இயக்கங்களுக்கும் ஒத்தவையாகவே இருக்கின்றன. அரசியல் மனவேறுபாடுகளால் தங்களுக்கு உடன்பாடான பொதுக் கருத்துகளில் கூட, இவ்வியக்கங்களைச் சார்ந்த கட்சிகள் ஒன்றுபட இயலாமல் இருக்கின்றன. மதம் என்னும் பெயரால் நடைபெறும் பொதுத் தொல்லைகளைப் பற்றிய தென்மொழியின் கருத்துகள் மக்கள் மனதில் விரைவில் பதியவும், அதன் மூலம் இத் தொல்லைகளைத் தடுத்து நிறுத்த வேண்டிய அரசின் பொறுப்பைச் சுட்டிக்காட்டவும் இக் கட்சிகளை நன்கு பயன்படுத்திட தென்மொழி வழி வகுக்க வேண்டும். அதன் வழி நின்று செயலாற்றத் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கும்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

www.thamizham.net - Free E book No 7506

"கெஞ்சுவதில்லை பிறர்பால்;
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!




சுவடி: 17 ஓலை: ௫
[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]
சிலை. தி. பி. ௨௰௧௧-
திசம்-'80-சன-'81.

# தென்மொழி

இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்
புரப்பாசிரியர்கள்:
தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
தென்மொழி ந. முத்துக்குமரனார் (தமிழ்நாடு)
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்
அமைச்சர்: அழ. இளமுருகன், அறி. இ.
(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன)


## தமிழில் வழிபாட்டுரிமை! — சில சிந்தனைகள்!



கோயில்களில் தமிழில் இறைவனை வழிபடுவதற்கு உரிமை இருத்தல் வேண்டுமென்று தமிழர்களிடம் ஒரு அண்மையில் கோரிக்கை கிளர்ந்தெழுந்திருக்கிறது. கோயில் வழிபாட்டுமொழி சமசுக்கிருதமாகவே இருத்தல் வேண்டுமென்றும், தமிழில் வழிபாடு செய்தால் கடவுள் படிமம் தீட்டுப் படுமென்றும் ஆரியப் பார்ப்பனரிடையில் ஒரு கருத்து மீண்டும் கிளர்ச்சியுற்றிருப்பதை யடுத்து, தமிழ் வழிபாட்டுக் கோரிக்கை தீவிர முற்றிருக்கின்றது. இக் கோரிக்கையை யொட்டி, கடந்த 25-12-80-ஆம் பக்கல், சென்னை பெரியார் திடலில் திராவிடர் கழகச் சார்பில் தமிழ் வழிபாட்டுரிமை மாநாடு ஒன்று கூட்டப் பெற்றது. பல்வேறு வகையில் தமிழுக்காகவும் தமிழினத்துக்காகவும் தொண்டாற்றி வரும் அறிஞர் பெருமக்கள் பலரும், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் உயர்திரு. கி. வீரமணி அவர்களால் கூட்டப் பெற்ற அம் மாநாட்டில் பங்குகொண்டு, தமிழ் வழிபாட்டுரிமை கோரி, கிளர்ச்சி தொடங்க வேண்டுமென்று

www.thamizham.net - Free E book No 7506

ஒருமனமாகத் தீர்மானம் நிறைவேற்றி முடிவு செய்திருக்கிறார்கள். மாநாட்டிற்குத் தவத்திரு. குன்றக்குடியடிகளார் தலைமை யேற்றார். மாநாட்டில் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், ஆட்சி மொழிக் காவலர் கீ. இராமலிங்கனார், சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலனார், திருக்குறளார் வீ. முனுசாமி, பெரியார் பேருரையாளர் பேரா. ந. இராமநாதன், பெரியார் பேருரையாளர் பர். மா. நன்னன், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேரா. பர். சி. பாலசுப்பிரமணியனார், சென்னை, மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பர். மெ. சுந்தரனார், பேரா. நாரண. துரைக்கண்ணனார் ஆகியோருடன், இக் கட்டுரையாசிரியரும் சேர்ந்து இத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர். இத் தீர்மானத்தையொட்டி வேறு இரு தீர்மானங்களும் அங்கு நிறைவேறின. தமிழ் வழிபாட்டுரிமைக் கிளர்ச்சித் தீர்மானம் பெரியார் அவர்களால் 6-1-62 அன்று சென்னையில் நடைபெற்ற திராவிடர் கழக மாநில மாநாட்டில் நிறைவேற்றப் பெற்ற தீர்மானமாகும்: இரண்டாவது தீர்மானம் கோயில்களில் வழிபாடு செய்ய விரும்பும் தமிழர்கள் தமிழ்த் திருமுறை நெறிகளின்படி புனலும் பூவும் இட்டுத் தமிழிலேயே வழிபாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதும், மூன்றாவது தீர்மானம் தமிழில் வழிபாடு செய்ய மறுக்கும் கோயில்களில் தமிழர்கள் தாமே தமிழில் வழிபாடு செய்து கொண்டு வந்துவிட வேண்டுமென்பதும் ஆகும்.

முதலில், இம் மாநாடு திராவிடர் கழகச் சார்பில் கூட்டப் பெற்றிருப்பது தமிழர்களுக்கெல்லாம் பெருமையளிக்கக்கூடிய ஒரு செய்தியாகும். மொழிமானமும் இனமானமும் கருதியே இம்மாநாட்டைத் தாம் கூட்டியிருப்பதாகக் கழகப் பொதுச் செயலாளர் உயர்திரு கி. வீரமணி அவர்கள் தம் வரவேற்புரையில், இம்மாநாடு கூட்டப் பெற்றதன் கரணியத்தைத் தெளிவாக விளக்கிக் கூறினார். தமிழ்க் குமுகாய நலன் கருதிய அவரின் இந்த அணுகு முறையை நாம் பெரிதும் மனமுவந்து பாராட்டுகின்றோம். அவரின் இந்த அணுகு முறையால் 'கடவுள் இல்லை' என்று கருதும் தம் கழகத்தின் உறைத்த கொள்கைக்குப் பழுது வந்து விட்டதாக அவரோ நாமோ கருதிவிடவில்லை. தம்மை விடக் கழகக் கொள்கை பெரிது; கழகக் கொள்கையை விடத் தமிழ் மானமும், தமிழர் மானமும் பெரியவை என்று அவர் கருதியதாலேயே பெரும் பெரும் சிவனிய, மாலியத் திருமடங்களும், தமிழ்ப் பேராசிரியர்கள் எனப் பெறுவோரும் செய்திருக்க வேண்டிய இச் செயலைத் துணிந்து செய்துள்ளார். இவ்வகையில் அவர்,

குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்

—என்னும் பெரியார் போற்றும் இத் திருக்குறளுக்கு இலக்கியமாகத்

www.thamizham.net - Free E book No 7506

திகழ்ந்து, தம் கொள்கை மானத்தினும் தமிழ் மானமும் தமிழர் மானமும பெரியவை எனக் கருதிப் பெருந்தன்மையுடன் பீடு பெற நின்று, நடுநிலைத் தமிழர்களின் ஒருங்கிணைந்த பாராட்டுக்கும் மதிப்பிற்கும் உரியவராகிறார். இன்று பெரியார் உயிருடன் இருந்திருந்தால், என்ன செய்திருப்பாரோ, அதையே துணிந்து செய்த தி. க. பொதுச் செயலாளரின் நனிநாகரிகச் செயலை நாம் மீண்டும் மிகுதியும் பாராட்டுகின்றோம். **தமிழினம், எவ்வகையான இயக்கக் கொள்கைகளால் வேறுபட்டுக் கிடந்தாலும், தமிழ் மொழியும் தமிழரும் இழிவுபடுத்தப் பெறும் பொழுது, ஒருங்கிணைந்து பாடாற்ற வேண்டும் என்னும் நல்லிலக்கணத்திற்கு ஒரு முன்னெடுத்துக் காட்டாய் நிற்கும் தி. க. பொதுச் செயலாளரின் கொள்கைக் கோட்பாடு, இங்குள்ள அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களாலும் கடைப்பிடிக்கத் தக்கதாகும்.** வாழ்க அவர் தமிழினத் தொண்டு!

இம் மாநாடு தொடர்பாக முதலமைச்சர் ம. கோ. இரா. அவர்கள், 'கடவுள் நம்பிக்கை யில்லாதவர்கள் கோயிலில் நடைபெறும் வழிபாடு பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்' என்று கேட்டிருப்பது சரியான கேள்வியன்று என்பது மட்டுமில்லை; நடுநிலையற்றதுமாகும். ஒரு கருத்தைத் தெரிவிப்பது யார் என்பது பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. தெரிவிக்கப் பெற்ற கருத்து சரியானதா, அறிவிற்குப் பொருந்துவதா, நடுநிலையானதா என்பது பற்றியே நாம் ஆராய்ந்தறிதல் வேண்டும். 'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்னுங் குறளை முதலமைச்சர் நன்றாக அறிந்திருப்பார். மேலும் வீரமணி ஒரு தமிழர். அதுவே வழிபாட்டுரிமை மாநாடு நடத்துவதற்குப் பெரிதும் தகுதியுள்ளவர் என்பதைக் காட்டும். அதன் மேலும் தொழில் நிலையில் அவர் சிறந்த ஒரு வழக்குரைஞர். தமிழுக்காகவும் தமிழினத்துக்காகவும் அவர் வழக்காடுவதற்குச் சட்டப்படியும் முழுத் தகுதி அவருக்குண்டு என்பதையும் முதலமைச்சர் உணர்தல் வேண்டும். ஊமையனுக்காக வாயுள்ளவர் ஒருவர் பேசுவதுபோல் அடிமை நிலையில் உள்ள தமிழினத்துக்காக, தமிழுக்காக அவர் குரல் கொடுப்பதை எவ்வகையிலும் தவறு என்று சொல்லிவிட முடியாது என்பதையும் அனைவரும் எண்ணிப் பார்த்தல் வேண்டும். மேலும், கடவுள் நம்பிக்கையற்றவர்கள், கடவுளைப் பற்றி எந்தக் கருத்தும் சொல்லவில்லையே. அக் கடவுள் முன் கூறப் பெறும் மொழி பற்றித்தானே கருத்துக் கூறுகிறார்கள். இதில் கவனிக்கப் பட வேண்டியவை மொழிமானமும் இனமானமுமே அன்றி,அவர்கள் எந்தக் கொள்கையினர் என்பதன்று. இனி, மாநாட்டில் கலந்து கொண்ட, கலந்து கொள்ளாத இறை நம்பிக்கையுடையவர்களின் கோரிக்கைக்கு முதலமைச்சர் என்ன விடை கூறுவாரோ, தெரிய

www.thamizham.net - Free E book No 7506

வில்லை. மொத்தத்தில், தமிழ்நாட்டில், தமிழ்க் கோயில்களில் தமிழில் வழிபாடு செய்யவேண்டும் என்பதைப் புறக்கணிப்பவர்கள் கட்டாயம் தமிழுணர்வுள்ளவர்களாகவோ தமிழர்களாகவோ இருத்தல் முடியாது என்பதே நம் கருத்தாகும். முதலமைச்சர் இது பற்றியும் நன்றாக எண்ணிக் கருத்தறிவிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

இனி, தமிழ்நாட்டுக் கோயில்களில் தமிழிலும் வழிபாடு செய்ய லாம் என்னும் நடைமுறைச் சட்டம் 1961-இலேயே, பக்தவத்சலம் முதலமைச்சராக உள்ள பொழுதே கொண்டுவரப் பெற்றதாகும். அந்நிலை ஏன் நெகிழ்ச்சியுற்றுப் போனது என்று நமக்கு விளங்க வில்லை. இதற்கு ஆரியப் பார்ப்பனரை விட நம் மக்களின் தன் மானக் குறைவும் ஏமாளித் தன்மையுமே பெருங் கரணியமாக இருக்க முடியும். இதுவன்றிச் 'சமசுக்கிருதத்தில்தான் கோயில் வழிபாடு செய்ய முடியும், தமிழில் செய்தால் அங்குள்ள கடவுள் படிமம் தீட்டுப்பட்டு விடும்' என்று தீய நோக்கம் கொண்ட பார்ப்பனர்கள் சிலர் கூறுவார்களானால், அவர்களுக்கு நாம் சில எச்சரிக்கைகளைக் கொடுக்க வேண்டியிருக்கும்.

'சமசுக்கிருதம் தேவமொழி யென்றும், அதுதான் கடவுளர் களுக்கு(!) உகந்த மொழி' என்றும் கூறி வந்ததும், அதை ஏமாளித் தமிழினம் நம்பி வந்ததும் மலையேறி விட்டன. இஃது அறிவியல் காலம். தமிழ்நாட்டில் உள்ள – தமிழர்கள் கட்டிய கோயில்களில் தமிழிலே வழிபாடு செய்வதைக் கேட்க விரும்பாத கடவுள்கள் தமிழ கத்திலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்னும் புரட்சிக் கருத்துகள் பூத்துக் குலுங்குகின்ற காலம். இந்தக் காலத்தில் தமிழினம் தன்மான வுணர்வு பெற்றுத் தன் மொழி, இன விடுதலைக் கும் நாட்டு உரிமைக்கும் போராடி வரும் இந்நிலையில் — பார்ப்ப னர்கள் தம் பழையகால 'வேதபுராண'க் கருத்துகளையே திருப்பித் திருப்பிக் கூறிக் கொண்டு, தமிழின முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டு வருவார்களானால், அஃது அவர்களுக்கும், அவர்களை வழி நடத்தும் சங்கராச்சாரி போன்ற அவ்வினத் தலைவர்களுக்கும் நல்ல விளைவுகளைத் தராது; மாறான விளைவுகளையே அவர்கள் சந்திக்க வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கின்றோம்.

'சமசுக்கிருதம் கி. மு. 1000 அல்லது 1500-ஆம் ஆண்டு அள வில், அன்று வட விந்தியப் பகுதிகளில் வழங்கி வந்த வட திரவிட மொழிகளான பிராகிருதம், பாலி முதலியவற்றின் கூட்டுச் சேர்க்கை யால் செயற்கையாக உருவாக்கப்பெற்ற மொழி யென்பதும், அது வெறும் ஏட்டு மொழியாக மட்டும் இருந்ததேயன்றி என்றும் பேசப் பெற்ற வழக்கு மொழியாக இருந்ததில்லை யென்பதும், அதற்கென்று எவ்வகைத் தெய்வத் தன்மையோ, சிறப்போ இல்லை யென்பதும், அஃது ஐந்திலிரு பகுதி தமிழ்ச் சொற்களும், இரு பகுதி தமிழ்

www.thamizham.net - Free E book No 7506


மூலத்தினின்று தோன்றிய சொற்களும், ஒரு பகுதி இடுகுறிச் சொற்களும் கொண்டதும், குழப்பமும் தெளிவற்றதுமான இலக்கணமுடையதுமான ஒரு மொழியென்பதும், அதிலுள்ள இலக்கியங்களும், அறநூல்களும் அறிவு நூல்களும், மெய்யறிவு நூல்களும், தமிழ் மூல நூல்களின் மொழி பெயர்ப்புகளும், தமிழ் முனிவர்களால் எழுதப் பெற்றவையுமே ஆகும் என்பதும், அண்மைக்கால அகன்ற, மொழி வரலாற்று ஆராய்ச்சிகளால் வெளிப்படும் மறுக்க முடியாத உண்மைகளாகும். 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் வெளிப்படும்' என்பது போல், ஆரியப் புளுகு ஆயிரம் ஆண்டுக்குப் பின் வெளிப்பட்டுள்ளது. இனியும் தமிழர்களில் சில வீடண, பிரகலாத, பக்தவத்சல, சுப்பிரமணிய, சிவஞான, மகாலிங்க, கண்ணதாச, அடியார்களின் அடிமைக் கூட்டங்களைத் தவிர, தன்னறிவும் தன்மானமும் மிகுந்து வரும் தமிழினம், ஆரியப் புளுகுகளையும் புரட்டுகளையும் நம்புவதற்கு அணியமாக இல்லை என்பதை அவ்வினத்தவர் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதுவன்றி, 'அது, இது' என்று மீண்டும் மீண்டும் பொய்யும் புளுகும் சொல்லித் தமிழினத்தை ஏமாற்றும் முயற்சிகளிலோ, இழிவுபடுத்தும் கீழான போக்குகளிலோ இறங்க வேண்டாம் என்றும் அன்புடனும் அறிவுடனும் அதே பொழுது பண்புடனும் அவர்களுக்குக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

இனி, இந்த அன்பும், அறிவும், பண்பும் கூடிய உரைகளால், எச்சரிக்கைகளால் அந்த இனம் திருந்திக் கொள்ள வில்லையானால், அல்லது அண்மையில் அவ்வினக் குளுவான்கள் சில நடத்திய ஊமைப் போராட்டம் போல் அவர்கள் தெருவில் இறங்கித்தான் விட்டார்கள் என்பது உண்மையானால்—அந்நிலை தொடருமானால், அதனையடுத்து நடைபெறும் பின் விளைவுகளுக்கு, இங்குள்ள எந்தத் தலைவரையோ, கட்சியையோ, கழகத்தையோ, பொறுப்பாக்க முடியாது என்றும் எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

இனி, இறுதியாகவும் உறுதியாகவும் தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் பார்ப்பனர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்: 'தமிழ்நாட்டில் உள்ள பார்ப்பனர்கள் ஏறத்தாழ மூவாயிரம் அல்லது நாலாயிரம் ஆண்டுகளாகத் தமிழர்களோடு தமிழர்களாய் ஒன்றாகக் கலந்து வாழ்ந்து விட்டவர்கள். அவர்கள் உண்கின்ற உணவும் உயிர்க்கின்ற காற்றும் உலவுகின்ற மண்ணும் தமிழகத்துக்குரியவை என்பது மட்டுமன்றி, அவர்களின் உடல்களில் ஓடிக்கொண்டிருக்கும் குருதியும் கூட தமிழர்களுடையதாகவே இருத்தல் வேண்டும். ஆனால் அக் குருதியில் எங்கோ ஆரிய இன அணுக்கள் இன்னும் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை இவ்வளவு நாள் இல்லாதபடி இப்பொழுது அண்மையில் எழுந்துள்ள அவர்களின் கிளர்ச்சிகள் நன்கு புலப்படுத்துகின்றன. மேலும்,

www.thamizham.net - Free E book No 7506

இந்த நிலை அவர்கள் தங்களைத் தமிழர்கள் என்று ஒப்புக்கொள்ள வில்லை என்பதையே வலியுறுத்துகிறது. இஃதுண்மையானால் **நாமும் அவர்களைத் தமிழர்கள் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் கோரிக்கைக்கு இடமில்லை.** அவர்களும் தங்களைத் தமிழர்கள்தாம் என்று முழு மனத்துடன் கூறவும் விரும்பவில்லை என்று தெரிகிறது. அவ்வாறன்றி அவர்கள் **தங்களையும் தமிழர்கள் தாம்** என்று கூறிக் கொள்ள விரும்புவார்களானால், அவர்கள் தங் களுக்கிருக்கும் சமசுக்கிருதவுணர்ச்சியை அறவே தவிர்த்துக் கொண்டு, அதுவும் ஒரு மொழி என்ற அளவில் மட்டுமே நிறுத்திக் கொண்டு, தங்கள் தாய்மொழி தமிழே என்பதையும் முழு நிறைவுடன் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். அத்துடன் நில்லாமல், தாங்கள் பிராமணர்கள்; இங்குள்ள அனைவரினும் உயர்ந்தவர்கள்; நிலத் தேவர்கள் என்ற புளுகுரைகளை யெல்லாம்—அவற்றை யடிப்படை யாகக் கொண்ட குறிகள் கோட்பாடுகளை யெல்லாம் மூட்டைகட்டி, அவ்வெண்ணங்களே மீண்டும் தோன்றுதபடி அவர்களின் இந்தப் போக்குக்குக் காரணமாகிய தங்கள் வேத,புராண, இதிகாசக் குப்பை களுடன் சேர்த்துத் தீயிலிட்டுப் பொசுக்கிவிட வேண்டும். அவ்வாறு செய்யுமுன் அந்நூல்களில் உள்ள வேறுபாட்டுக்கிடமில்லாத, நல்ல அறிவுச் செய்திகளையும், பொதுநல வுணர்வுக்கு உதவுகின்ற வாழ் வியற் கருத்துகளையும் வேண்டுமானால், தனியே எடுத்துப் புது நூல் களாக உருவாக்கிக் கொள்ளட்டும். ஆனால் இவையெல்லாம் நடந்து விடும் என்ற நம்பிக்கையில் நாம் இதை எழுதவில்லை. நடந்தால் தான் நல்லது என்னும் நல்ல எண்ணத்தால் எழுதுகிறோம். மற்றபடி பார்ப்பனர்கள் இக் கருத்துகளை அப்படியே கடைப்பிடிக்க விரும்ப வில்லையாயின், இவற்றின் அடிப்படையிலாகிலும், தங்களின் இன்றைய போக்குகளை மறு ஆய்வு செய்து கொள்ள விரும்புவார் களாக. இல்லெனில், தமிழ்நாட்டில் அவர்களுடைய எதிர்காலம் இனி இருண்டதாகவே இருக்கும் என்பதை அவர்களுக்கு வருத்தத் துடன் கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.



## அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு

நடக்க விருக்கும் ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பொறுப்பாசிரியர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** கலந்து கொள் கிறார்கள். அவ்வமயம் அச்சக அலுவலகப் பணியாளர்களும் மதுரை செல்ல இருப்பதால் சனவரித் திங்களிதழ் காலந்தாழ்ந்தோ, அடுத்தத் திங்களிதழோடு இணைந்தோ வரும். —அமைச்சர்

www.thamizham.net - Free E book No 7506

# வேங்கையே! எழுக!

—கடலூர். மணிமாறன், க. மு. கீ. க இ.

தமிழாலே வாழ்கின்றீர்! தமிழ்பேசிப்
பிழைக்கின்றீர்! தமிழ ரென்றே
தமிழ்நாட்டில் திரிகின்றீர்! தம்பட்டம்
அறைகின்றீர்! தொண்டை நோகத்
தமிழ்தமிழென் றளக்கின்றீர்! தமிழ்க்கொலையே
புரிகின்றீர்! தமிழைப் போன்றே
அமிழ்தனைய மொழியுளதோ? என்றுரைத்தே
அலைந்துழல்வீர்! பயனென் கண்டீர்?

தமிழெங்கே வாழ்கிறது? தமிழெங்கே
வளர்கிறது? தமிழர் நாட்டில்
தமிழ்வாழத் தாம்வாழும் தமிழ்நெஞ்சம்
வாடுவதை அறிவா ருண்டோ?
தமிழ்நாட்டுத் தெருக்களிலே தமிழ்மணமா
நுகர்கின்றோம்? வேற்றோர் நாட்டில்
தமிழ்முழக்கம் கேட்பீரா? தன்மானம்
அற்றோரே! தமிழைக் காப்பீர்!

சோறுண்ணும் மாந்தரெலாம் வேறுண்ணப்
பார்த்தீரோ? சொரணை யற்றே
சோறென்றால் இழுக்கென்று 'சாத'மென்றே
சொல்வோருண் டிங்கே; அன்னோர்
வேறுண்டால் நன்றென்றே விளம்பிடலாம்;
வீணுக்கேன் சோற்றைத் தின்றே
ஊறுதேட எண்ணுகிறார்; தமிழுக்கேன்
உலைவைக்க முயல்கின் றாரோ?

தனித்தமிழில் முரசறையும் தாளிகைகள்
நிலையென்ன? எழுத்தும் சொல்லும்
தனித்தமிழே மூச்சென்னும் தமிழறிமா
முனைப்புடையார் யார்? யார்? இற்றைத்
தனித்தமிழ்ப்பா வாணர்களின் வாழ்வென்ன?
தமிழ்க்கொலைஞர் வாழ்வும் யாதோ?
தனித்தமிழும் தழைக்காதோ? தண்டமிழர்
உய்யாரோ? தமிழர் நாட்டில்

சாதிமதப் பெருங்குழியில் சாய்கின்றீர்!
வீழ்கின்றீர்! இறைவன் பேரால்
தீதியற்ற அஞ்சுகிலீர்! திருடுதற்கும்
நாணுகிலீர்! பொய்ம்மை மேவும்

www.thamizham.net - Free E book No 7506

## இருப்பு...எது...?

—இரணியன்.

(இப் பாடல், காவல்துறையினரின் தாங்கொணு அட்டூழியங்களைக் கேள்வியுற்றபோதில் எழுதப் பெற்றதாகும். தமிழறிந்தாரிடையே, இந்நாள் இந்தியக் காவல்துறையின் உண்மை உருவத்தைக் காட்டுதற்கு இது முயல்கிறது.)

நெஞ்சம், பதறும் நினைவெழும் போதில்; நிலைகலங்கும்;
ஏஞ்சல் எதுதான் எனமிக எண்ணி எரிந்தழியும்;
அஞ்சிக் கிடந்து முடிவதோ வாழ்வெனக் கேட்டலறும்;
துஞ்சிச் சிதைந்து மடியுமுன் ஏந்தாய் துமுக்கியென்னும்!

என்னெனச் சொல்வதோ, இந்திய மாத்துணைக் கண்டமிதில்
வன்கொலை, கேடு, வதைத்திடல், கற்பழிப்(பு) என்றுநிதம்
ஒன்றுவி டாமல் இயற்றும் கொடியவர் கும்பலுக்கே
நன்மையின் 'காவலர்' என்றுபேர் சூட்டி நயந்திடிலே!

ஒன்ரு, இரண்டா? நிதம்ஆ யிரம்'அறக் கேடு'செய்தார்!
கொன்று குவித்தார் புரட்சிக் குருளைகள் நூற்றுவரை!
மென்ருர் மறுவிலா மங்கையர் பற்பலர் கற்பறத்தை!
என்றும் வழக்குகள் பொய்களால் ஏற்றி இலங்கினரே!

உடைமைத் திருடர் உறிஞ்சலைக் காக்க உருச்சமைந்தோர்;
மடமை, கயமை, இழிமைகள் பேணியே வாழ்வுறுவோர்—
அடிமை தனது தளையுடன் சற்றே அசைந்திடினும்
கொடிய இரும்புத் தடிகளால் தாக்கியே கொல்லுவரே!

'கொல்லுங் கொடியர், சுரண்டுநர், இன்னுர் அர(சு)' இவற்றை
'இல்லார்' துமித்து விடுபெற வேண்டின், ஒருமுதலாய்
வல்லார் திரண்ட'மக் கட்படை' வேண்டும்! இலாதொழியின்
எல்லாம் முயற்கொம் பெனவே முடிந்திடல் காண்குவமே!

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

வேதியராம் நரிக்குலத்தின் விரகார்ந்த
சூழ்ச்சியினை அறியீர்! இன்னும்
சூதுணரும் திறனறியீர்! 'சூத்திரனுய்'
வாழ்வதிலே சுவையென் கண்டீர்!

பாராண்ட பெருமையெலாம் பழங்கதையோ?
ஏடுகளில் படிப்ப தோடு
நேராய செயற்றிறனும் நெறியார்ந்த
விளைப்பாடும் அற்றுப் போமோ?
சீரார்ந்த செந்தமிழின் சிறப்புயர்த்த
வேண்டாவோ? இன்றே இன்னே
வீருர்ந்த தமிழ்ப்புலத்தை விடுவிப்பீர்!
விழிப்புறுவீர்! வேங்கை ஆவீர்!

www.thamizham.net - Free E book No 7506

# 'தகுதி' - தடையும் விடையும்

(தமிழூர் ப. அருளி அவர்களின் மொழியாய்வு நூலான 'தகுதி' பற்றி ஒரு திறனாய்வுரையை வெங்காலூர் கு. பூங்காவனம் அவர்கள் எழுதியனுப்பியிருந்தார். அவர் கட்டுரையை நூலாசிரியருக்கு அனுப்பினோம். அவர் அதற்கு விடையாக ஒரு கட்டுரையை விடுத்துள்ளார். இரண்டையும் இங்கு வெளியிட்டுள்ளோம். —ஆ-ர்)

## 'தகுதி'— ஒரு திறனாய்வு

**கு. பூங்காவனம் க. மு.**

**தமிழூர் ப. அருளி** எழுதிய **'தகுதி'** என்னும் சொல்லாய்வு நூல் வெளியானமை குறித்துச் சில திங்களுக்கு முன்பே கேள்வி யுற்றேனாயினும் மிக அண்மையிலேயே அதனைப் படித்துப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது (நூல் வெளியான ஆண்டு எங்கும் குறிக்கப் பெறவில்லை!)

தமிழொழிந்த பிற உலக மொழிகள் அனைத்தும் திரிபு மொழி களாகவும், திரிபில் திரிபு மொழிகளாகவும் உள்ளவாதலின், சொல் லாய்வு செய்யப் புகுந்த மேலை மொழியியலார் எம் முடிவும் கொள்ள வியலாமல், எல்லாச் சொல்லும் இடுகுறி என்றும், சொல்லாய்வு பயனற்றதென்றும் கூறி இடர்ப்பட்டனர். தமிழில் மொழியியல் அறிமுகம் செய்து கொண்ட கிளிப்பிள்ளைகளும் அக் கூற்றை அப் படியே ஒப்பித் திருப்பிச் சொல்வாராயினர்.

தமிழ் மொழியிலும் சொல்லாய்வு மேற்கொள்வார் மிகவும் விழிப் புடனும் உண்மை காணும் விருப்புடனும் ஆய்வு மேற்கொண்டால் அன்றி, கடுஞ் சறுக்கலுற்று இடர்ப்படுவர். சொல்லாய்வு செய் வார் வரலாற்றுச் சொல்லாய்வு முறையாகிய சொற்பிறப்பியல் முறையை மேற்கொண்டால் மட்டுமே தெளிவுடன் உண்மை காண ஒல்லும்.

விதையும், முளையும், வேரும், அடியும், முதனிலையும் என ஒழுங்குபடத் தமிழில் காணப்படும் சொல் வரலாற்றையும் வளர்ச்சி யையும் பாவாணர் காட்டுவர். வேர்ச் சொல்லும் ஆணிவேர், பக்க வேர், கிளைவேர், சிறுகிளைவேர், எனப் பிரிதலும், வியப்பு மாந்தர் கோ. துரைசாமி அவர்கள் ஒரு மரத்திலேயே பல்வேறு சுவையை யுடைய கனிகளை உண்டாக்கியவாறு போல வேர்ச் சொல் ஒன்றே பல்பொருட் சொற்களுக்கு மூலமா யிருத்தலும் உண்டு.

'தகுதி' நூலின் தொடக்கத்தில் 'தகு' என்னும் **வேர்ச் சொன் முதனிலை'** என்றும், 'தகு—இச் சொன் முதனிலையை (Stem)' என்றும், 'தகு—(வேர்ச் சொன் முதனிலையும் வினைச் சொல்லும்)' என்றும் கூறப்பட்டிருத்தலே, **'தகு'** என்பது வேர்ச் சொல்லா,

www.thamizham.net - Free E book No 7506

முதனிலையா என்னும் தெளிவு நூலாசிரியர்க்கின்மையைக் காட்டி விடுகின்றது.

சொன்மூல வடிவ வரையறையும், அதன் பொருள் வரையறையும் இன்மையால், நூன் முழுமையும் ஆசிரியர் இடர்ப்படும்இடங்கள் பலவும் தெளிவாகப் புலனாகின்றன. சான்றாக ஒன்று: 'தகு— பொருந்து, இணை, சேர், தொடு, அமை, அணை, மேம்படு, ஒன்று, ஏற்றதாகு, தொடங்கு, கிட்டு, ஒவ்வு, நடுவு, நிலைமையாயிரு, நிறைவாயிரு, பெறு, சிறப்புறு, ஒன்றுபோல் தோன்று, ஏல், கட்டு, மேற்கோள் (மற்றும் பொருந்துதல் கருத்து அமையும் ஏனைய பொருட்செறிவையும் இவ்வேர்ச்சொன் முதனிலை உள்ளடக்கியுள்ளது)'—(பக்.17)என்று 'தகு' என்பதன் பொருளை விளக்கினும், தகு என்பதன் வளர்ச்சி வடிவமான தகை என்பதற்கு 'தகுதி, பொருத்தம், ஒப்பு, ஒத்தல், ஒப்பனை, அழகு, அழகின் தன்மை, படையின் தோற்றப் பொலிவு, தறுகண்மை, வலியின் தன்மை, பற்றுதல், பிடித்தல், நெருக்குறுதல், மிகுதி, பெருமை, பெருமிதம், சிறப்பு, அருள், நல்லியல்பு, பண்பு, குணம், இயல்பு, நிகழ்ச்சி (பக். 27) என்று பொருந்துதல் கருத்தமையாத பல பொருள்களையும் சுட்டி அவற்றிற்கு அமைதி கூற முடியாது விட்டு விடுகின்றார்! 'தகை' என்பதன் திரிபே 'Ethics' ஆகலாம். ஆயின் பிழைபடும் ஆய்வாளரை, 'பேரறியாமைப் பெருங்களஞ்சியமாய மேலையர்' எனச் சாடுதல் எத்தகுதி பற்றியோ?

'தகவன்' என்பதே 'தகப்பன்' என்றாயது என வலிந்து கூறப் புகுந்து, பகவு-பகவன் ஆராய்ச்சியிலும், 'குத்தகை' என்பதன் பொருளை விளக்கப் புகுந்து மத்தள-கொத்தள ஆராய்ச்சியிலும் இவ்வாறே வேறு சில இடங்களிலும் மற்றொன்று விரிக்கப் புகுந்து விடுகின்றார்.

தேவநேயத்தின் (ஆசிரியரின் நல்ல சொல்லாட்சிகளுள் ஒன்று) அடியொற்றி ஆய்வு மேற்கொள்வதாகக் கூறிக்கொண்டு,பாவாணர் உண்மை காணும் ஒரே நோக்கால் ஆய்ந்து கண்ட முடிவுகளையும் மறுக்கத் துணியும் இந்நூலாசிரியரின் பேதைமையை எண்ணி வருந்தாதிருக்க முடியவில்லை.

'தமப்பன்' 'தகப்பன்' ஆயது என்பது பாவாணர் கண்ட உண்மைகளுள் ஒன்று. தம்பின், தம்அக்கை என்பது போலவே தம்அப்பனும் தமப்பன் என்று வழங்கிப் பின் தகப்பன் ஆயது. 'தகப்பனி'ல் உள்ள 'தக' என்னும் முன்னிரண்டு எழுத்துகளைக் கொண்டே அதனைத் 'தகு'வுடன் முடிந்து மயங்குவதும், 'தமப்பன் என மலையாளத்தில் உள்ள சொல்லைக் கருத்தில் கொண்டு 'தகப்பன்! எனத் திரிபடைந்தது என முடிவு கட்டல் சரியன்று' என்று கூறியிருப்பதும் அருளியார் மீது இரக்கத்தை உண்டாக்குகின்றன.

www.thamizham.net - Free E book No 7506

மலையாளம் தமிழினின்றும் மிகப் பிற்காலத்தில் திரிந்ததே யாயினும், மிகுமழைக் கரணியத்தால் தமிழ்ச் சொற்களின் மூக்கொலி வடிவத்தை அம்மொழி அப்படியே தங்க வைத்துக்கொள்வது இயல்பு.

(எ-டு) செம்-செம்மை-சிகப்பு (தமிழ்)
செம்-செம்மை-செமப்பு-சுமப்பு (மலையாளம்)

இவ்வாறே பாவாணரை மறுத்துரைத்துள்ள ஐந்தாறு இடங்களும் உண்மை காண மறுத்த இடங்களாகவே உள்ளன.

ஞானகிரியாரை உண்மையை நாடாதவர் என்று பகடி பண்ணும் இந்நூலாசிரியர், ஞானகிரியார் பிழைத்தவாறே, மேலை மொழிகளில் புகுந்த தமிழ்ச் சொற்கள் எந்நிலையில் எவ்வடிவத்துடன் எம்மொழிக்குச் சென்று பிற மொழிகளில் எவ்வெவ் வடிவத்துடன் இடம் பெற்றன என்று முறைப்படி காட்டத் தவறியுள்ளார். நூலாசிரியரின் இம் முயற்சி ஏமாற்றமே யளிக்கின்றது. ஆரவாரமான சொல்லாட்சிகள் இவர் மிகவும் பண்பட வேண்டியவர் என்பதைக் காட்டுகின்றன. எனினும், ஆய்வாளனுக்கு வேண்டிய கடும் உழைப்பு இவரிடம் காணப்படுவது சிறிது நம்பிக்கை யூட்டுகின்றது.

## திறனாய்வின் மேல் ஒரு புலனாய்வு

### தமிழூர். ப. அருளி, வணி. இ; ச. இ.

**'தகுதி—ஒரு திறனாய்வு'** என்னும் பெயரில் திருவாளர் கு. பூங்காவனம் க. மு அவர்களால் வெளியிட வேண்டி எழுதியனுப்பப் பெற்ற கட்டு உரையை, பாவலரேறு ஐயா அவர்கள் எனக்கு அனுப்புவித்து, 'நூலாசிரியன் என்ற முறையில் உங்களின் விடையை எதிர் நோக்குகின்றேம்' என்று தெரிவித்திருந்தார்கள். அதற்கான என் விடை யிது

நூல் வெளியான நாள் 11-2-1979 ஆகும். பலவகையான வினைச் சுமைகளால், என்னுலும், அச்சிடுவித்தவராலும் இவ்விடுபாட்டைப் பின்னரே கவனிக்க நேர்ந்தது. ஆனால் இதனால் பெறும் இழப்போ, தடங்கலோ என்னவாக இருக்கும் என்று மெய்யாகவே விளங்கவில்லை.

சொல்லாய்வு செய்யப் புகுந்த மேலை மொழியியலார் அனைவருமே எல்லாச் சொல்லும் 'இடுகுறி' என்று கொள்வதாக எப்படி முடிவு செய்ய முடியும்? சொல்லாய்வு பயனற்றது என்று இதுவரை எந்த மொழியியல் ஆய்வாளரும் சொன்னதாகத் தெரியவில்லை. அப்படிச் சொல்லியிருப்பின் தொடர்ந்து சொல்லாய்வு நூல்கள் எப்படி வெளித் தோன்றி வந்து கொண்டிருக்க முடியும்? இனி,

www.thamizham.net - Free E book No 7506

வேர்ச்சொல்,—ஆணிவேர் பக்கவேர் கிளைவேர் சிறு கிளைவேர் எனப் பிரியாது. ஆணிவேரே பக்க வேர்களையும், கிளைவேர்களையும், சிறு கிளை வேர்களையும் கிளை தரும். வியன் மாந்தர் கோ. துரைசாமி அவர்கள் எந்த மரத்தில் எவ்வெச் சுவையுடைய எக் கனிகளை உண்டாக்கிக் காட்டினார்கள் என்பது தெரியவில்லை. அந்த ஒப்புமை இத் திறனாய்வில் எப்படிப் பொருந்துகின்றது என்பதுவும் காட்டப் பெறவில்லை.

தகு-என்பதே வேர்ச்சொல்; அதுவே முதனிலை; அதுவே வினைச் சொல். அந்த மூலச் சொல்லைப் பொறுத்தவரை அதனின் வடிவத் திற்கும் கீழாகச் சென்று உல்-உள்-துள்-தள்-தரு-எனக் கொண்டு சென்று பார்க்கும் வேண்டா முயற்சியில் ஈடுபட வேண்டியதில்லை. தமிழின் பழைமையையோ பெருமையையோ அதன் மூலம் நாட்டி விடவோ, உலகை ஒப்பச் செய்யவோ இயலாது. இ'து அம் மூலச் சொல்லைப் பொறுத்த வரையே! அதன் தெளிவையும் வளர்ச்சியை யும் நூல் முழுதும் பதிந்து பார்க்கின் தெற்றென விளங்கும். வேர்ச் சொல் என்று சொல்லும்போதே ஒரு வடிவ அடிவரையறையாகிப் பொருள் குறிக்கத் தொடங்கி விட்ட சொல்லையே ஏற்றுக்கொள்ள இயலும். பொருளே குறியாத மூல வடிவங்கள் இன்மையையும், அப்படியிருப்பின் அதை வேர்ச்'சொல்' என்று சொல்ல இயலாமை யையும் இங்கு எண்ணுக!

சொல் மூல வடிவ வரையறையும் பொருள் வரையறையும் இன்றி ஆசிரியர் இடர்ப்படுவதாகக் கூறுவது, ஒரு பொது மறுப்பே. அவற்றைத் தெளிவாகத் தெரிந்து தெளிந்து கொண்ட பின்னரே அக் கட்டுரை நூல் எழுதப் பெற்றது. நூலை நடுநிலை யுடன் முழுதுங் காணும் எவரும் ஒப்புவர்.

'தகு' என்பதன் வளர்ச்சி வடிவமான 'தகை' என்பதற்கு, தகுதி, பொருத்தம், ஒப்பு, ஒத்தல், ஒப்பனை, அழகு, அழகின் தனமை. படையின் தோற்றப் பொலிவு, தறுகண்மை, வலியின் தன்மை, பற்றுதல், பிடித்தல், நெருக்குறுதல், மிகுதி, பெருமை, பெருமிதம், சிறப்பு, அருள் நல்லியல்பு, குணம், இயல்பு, நிகழ்ச்சி என்று பொருந்துதல் கருத்து அமையாத பல பொருள்களையும் சுட்டி அவற் றிற்கு அமைதி கூற முடியாது விட்டு விட்டதாகத் திறனாய்வாளர் கூறியுள்ளார். அச் சொல்லுக்கு முறைப்படக் கூறியுள்ள தகுதி, பொருத்தம், ஒப்பு, ஒத்தல், ஒப்பனை ஆகியனவேனும் பொருந்துதல்-கருத்து அமையாதனவாகத் திறனாய்வாளர்க்குப் பட்டிருப்பது வியப்பாயுள்ளது. ஒட்டு மொத்தமாகப் 'பொருந்துதல் கருத்து அமை யாத' என்று எவ்வாறு எண்ணமலேயே எழுதியுள்ளார் என்பதுவும் விளங்கவில்லை. அழகு, படையின் தோற்றப் பொலிவு, தறுகண்மை போலும் பொருள் வளர்ச்சிகள் அச் சொல்லினின்று ஏற்பட்ட கிளை

www.thamizham.net - Free E book No 7506

ஆக்கங்களாகும். (பொருந்துதல் கருத்தில் கவின் (அழகு) என்பது தோன்றவில்லையா? கவ்வுதல்-பற்றுதல், பொருந்துதல், பற்றியிழுத்தல்). அவற்றின் பொருள்களையும் அவை பயிலும் கழகக் கால ஆணிச் சான்றுகளையும் அந்நூலில் நான்கு பக்கங்களில் விரிய விளக்கியும், அவற்றின் மெய்புணர மாட்டாது வேண்டுமென்றே தவிர்க்கும் திறனாய்வாளர்க்கு இவ்விடத்தில் மேலும் விளக்குவது வீணன்றோ? உண்மையைக் காட்டியிருக்கும்போது அமைதி கூறத் தேவையில்லை யன்றோ? வேர்ச்சொல் ஒன்றே பல்பொருட் சொற்களுக்கு மூலமாயிருத்தலும் உண்டு என்று முன்னே அழுத்தந்திருத்தமாகக் கூறியவர் பின் ஏன் பிறழ்கின்றார்?

('கொள்' எனும் வினைச் சொல்,—முகத்தல், தன்னுட் கொள்ளுதல், இடுதல், உண்ணுதல், பிடித்தல், கைப்பற்றுதல், பொருந்துதல், ஒத்தல், ஏற்றல், மணத்தல், விலைக்கு வாங்கல், கடன் வாங்கல், பெறுதல், கவர்தல் கொள்ளையடித்தல், மிகுதல், திரைபெறுதல், கொல்லுதல், கொல்லத் தொழில் செய்தல், கருதுதல், மதித்தல், கொண்டாடுதல், மேற்கொள்ளுதல், மதமாக நம்புதல் போலும் கிளைக் கருத்துகளைத் தோற்றுவிக்கும்-என்று பாவாணர் எழுதியுள்ளமையையும் (வேர்ச்சொல் கட்டுரைகள். பக்கம் 198-201) இனி இத் திறனாய்வாளர் மறுத்தாலும் மறுக்கலாம்!)

பிழைபட்ட ஆய்வாளரை, 'பேரறியாமைப் பெருங்களஞ்சிய மாய மேலையர்' என்று எழுதிவிட்டமைக்குப் பெரிதும் வருந்துகின்றேன். 'பிழைபடும் ஆய்வாளர்' என்று தெளிவாகக் கூறியுள்ள இத் திறனாய்வாளர் 'தகை' என்பதன் திரிபே 'Ethics' ஆகலாம் என்று ஐயுற்று எதற்கு முன் பின் முரணுகின்றார் என விளங்கவில்லை. (Play என்பது 'போலச் செய்தல்' என்பதுடன் தொடர்புடையதா(!) என்பது ஆராயத் தக்கது என்று எழுதியவர் இத் திறனாய்வாளர்!—(தென்மொழி சுவடி. 16. ஓலை 3. பக்கம். 26.)

தகவன் என்பதே தகப்பன் என்றாயது என்று நூலுள் எங்கும் குறிப்பிடவில்லை. (தகு + அப்பன்)—தகப்பன் என்றே சுட்டப்பட்டுள்ளது. மற்றொன்று விரித்தல் என்னும் குற்றம் படுவதாக அவர் சுட்டும் இடங்கள்,-விளங்க வைத்தலுக்காக விரித்தனவே! அவையும் அளவோடேயே! (அவை கூறப்படாதிருந்திருப்பின், 'குன்றக் கூறல்' என்னும் குற்றம பட்டிருப்பதாக இவர் கண்டிதமாய்ச் சுட்டியிருப்பார்!)

'தேவநேயம்'தான் எனக்கு மொழியறிவுக் கால்கோளிட்டது. அந்நூல் எழுதப் பெற்றதும் அப் பெருமகனாரின் ஆக்கங்களின் பயனாய்ப் பெற்ற ஊக்கமே! அந்நிலைகளை அக் கட்டுரையின் முன்னுரை நன்றியுரைகளில் செவ்வனே விளக்கியிருக்கின்றேன். அவரின் பெருமைகளையும் பணிச் சிறப்புகளையும் பலபட விரித்து

www.thamizham.net - Free E book No 7506

மிருக்கின்றேன் எண்பது பக்க அளவான அந்நூலில் இரண்டு மூன்று பக்கங்களில் மட்டுமே. ஒரு சிலவற்றை மட்டுமே மறுத்து நிறுத்தினமையைச் செய்யத் தகாததென நான் கருதவில்லை. மொழியியலும் ஓர் அறிவியல் ஆகையால் அதன்கண் பல்வேறு கருத்தூட்டங்கள், புதுக் கேள்விகள், புதுப் பார்வைகள் உண்மை நோக்கில் வெளிவரல் இயல்பே! அதன் வளர்ச்சிக்கு அந்நிலை தேவையே! ‘முன் கொள்கையர் முடிபே முற்றச் சரி; பிற எதுவும் பிழையே’ என அடாவடி அடித்து எதிர்த்தலும் வழக்கமானதே!

பாவாணர் ‘ஆய்ந்து கண்ட முடிவுகள்’ எல்லாவற்றையுமே நான் மறுக்கவில்லை! ஆனைக்கு அடி சறுக்கியது போலும் சில வழுக்கல்களைச் சுட்டிக் காட்டியமையை மொழியியல் பார்வையோடு மட்டுமே காணல் வேண்டும். கசண்டோடு கண்டால் தம் கறைகளே மறைத்துக் காட்சியும் கலங்கலாகத் தோன்றத்தானே செய்யும்! பாவாணர் மொழியாய்வு செய்து வருகையில் எந்தத் தமிழனும் அத்துறையில் இறங்கவோ, கண்டு காட்டவோ, கருத்தறிவிக்கவோ கூடாதா? அவரின் சில கருத்துகளை நன்னெஞ்சத்தோடு மறுப்பது தமிழுக்குக் கேடா?

பிழைபடும் ஆய்வாளரை ‘பேரறியாமைப் பெருங்களஞ்சியமாய மேலையர்’ என்று எழுதி விட்டமைக்குத் ‘தகுதி’ உசாவியவர், என் பேதைமையை எண்ணி வருந்துவதாகக் கூறித் தினவடங்குவது மகிழ்ச்சிக் குரியதே!

கழக இலக்கியங்கள் எவற்றிலும் தமப்பன், தகப்பன் ஆகிய இரு வடிவங்களும் காணக் கிடைக்கவில்லை. இவை அவற்றிற்குப் பிந்திய வழக்கே! தகப்பனில் உள்ள முன்னிரண்டு எழுத்துகளைக் கொண்டே அதனைத் ‘தகு’வுடன் முடிந்து நான் மயங்குவதாகக் கூறுவது அவரின் குறும்புக் கூற்றாகவே படுகின்றது. தமப்பன்—தகப்பன் ஆகியிருந்தால்,—தமக்கை-தகக்கை-தக்கை என்றும், தமையன்-தகையன்-தகயன் என்றும் ஏன் மாறவில்லை என்பதற்கு அவரால் வரையறை காட்ட இயலுமோ? ‘தக்கார்’ என்பது போலும் கழகக் கால வழக்குகளும், (நல்+தாய்=) நற்றாய் போலும் பண்புக் கூறு சிறப்படை புணர் சொல்லமைப்பும், மருவு+மகன் = மருமகன் என்பது போலும் வினைச் சொற்புணர்ச்சியும் அதன் மருஉ ஆக்கமும், தகு+அப்பன் = தகப்பன் எனப் புணர்ந்தமைந்து வடிவெய்தியமைக்குச் சான்றும்.

‘அருளியார் மீது இரக்கத்தை உண்டாக்குகின்றன’ என்று எழுதியமை. உண்மையில் அவரின் வீணான மனவுளைச்சலையே காட்டுகின்றது.

செம்-செம்மை-சிகப்பு-(தமிழ்). செம்-செம்மை-செமப்பு-சுமப்பு (மலையாளம்) என்னும் அவரின் எடுத்துக் காட்டு, பாவாணர் உட்பட

www.thamizham.net - Free E book No 7506

மொழியியலார் எவர்க்கும் —இத் திறனாய்வாளரின் சொன்மூலத் திரிபும் வளர்ச்சிப்படிகளும் தெரியா வெண்மை நிலையைத் தெரிவிப்பதாகும். செம்மை-செவ்வை ஒ. நோ: அம்மை-அவ்வை. செம்-செவ்-செவப்பு-சிவப்பு-சிகப்பு எனத் திரியவே முறைப்படி வழியுள்ளது. பாவாணர் காட்டிய செப்ப வழியும் இதுவே. செவப்பு-சுவப்பு ஆகி மலையாளத்தில் நிலைக்கின்றது திறனாய்வாளரின் எடுத்துக்காட்டுப்படி, செம்மை நேரடியாகச் சிகப்பு ஆகும் என்பது புதிராகவும், மெய்க்கு எதிராகவும் உள்ளது. செம்மை, சிவப்பு என திடுதிப்பென ஆகாது. ஏனெனில் மகரம்,—ககரமாகாது. அம் மகரம் வகரப் பேறு பெற்ற பின்னரே வழியுள்ளது. (அப்படியானால் தகப்பன் என்பது 'தவுப்பன்' என்றுள்ள இன்றைய கொச்சைத் திரிபைக் காட்டி, தவப்பன்—தகப்பன் ஆகாதா என்று கேட்கலாம்! தகப்பன் என்பதே பின்னால் தவப்பன், தவுப்பன் என பேச்சிடைத் திரிபேற்றதை அவர்கள் கருதுவார்களாக! (ஒ. நோ: மகள்-மவ; புகை-பொவ.)

'ஞானகிரி' மொழியியலில் 'அஆ' தெரியாதவர். தமிழ் நல நோக்கில் அவரை அந்நூலுள் கண்டித்தேன். நூலுள் அமைவாக நுழைந்து திறனாய்வாளர் கண்டிருந்தால் வேர்ச்சொல்லொன்றின் விளக்க முறைப் போக்குகளை ஓரளவேனும் உணர்ந்திருக்கலாம். அடுத்து, இம் முயற்சி ஏமாற்றம் அளிப்பதாகக் கூறுகின்றார். யாருக்கு ஏமாற்றம் அளித்தது என்பது விளங்கவில்லை. தமிழுக்கு ஏமாற்று (ஏம்+ஆற்று=பாதுகாப்பு வழியதாக) முறையில்வெளிக்கொணர்ந்ததாகவே தெளிவாகக் கருதுகின்றேன். இம் முயற்சி ஏமாற்றமுடையதன்று; தமிழுக்கான ஏமாப்புப் (வலிமை, பாதுகாப்பு, நன்மை) பணிகளுள் ஒன்று.

திறனாய்வின் முடிவில் 'எனினும், ஆய்வாளனுக்கு வேண்டிய கடும் உழைப்பு இவரிடம் காணப்படுவது சிறிது நம்பிக்கையூட்டுகின்றது' என்றும்,—'தேவநேயம்' என்று குறித்ததை, 'ஆசிரியரின் நல்ல சொல்லாட்சிகளுள் ஒன்று' என்றும், – இரண்டே இடங்களில் 'சிறு பெருமை' தந்துள்ளார். திறனாய்வு எனும் பெயரில் எழுதத் தொடங்கி விட்டமையால் நடுவு நிலைமையோடு செய்ய வேண்டிய இக்கட்டான வரைமுறைக்கு ஆட்பட்டு வேண்டுமென்றே அவ்விரண்டையும் சுட்டியிருக்கின்றார். மொத்தத்தில், நூலாசிரியனை வலிந்து தாக்கவும், பாவாணர்க்குப் பக்க வாச்சியம் இசைக்கவும் இத் திறனாய்வு என்ற பெயரில் வசை பெய்திருக்கின்றார். பாவாணர்க்கும் இவரின் இத் திறனாய்வுக் கட்டுரை எரிச்சலையே தருவதாகலாம்.

ஆய்வு முறையில் (நூல் கருத்துக்கு) ஓரிடத்திலும் அடிகொடுக்க சிறு முயற்சியும் திறனாய்வாளர் செய்யாதது எனக்கே

www.thamizham.net - Free E book No 7506

வருத்தமாகத் தானிருக்கிறது! நேரடியாக எனக்கே எழுதாமல், நூல் வெளிவந்து இரண்டு ஆண்டுகள் முடியப் போகும் தறுவாயில், குறிப்பாகத் **தென்மொழியில்** வெளியிட வேண்டி அனுப்புவித்திருப்பது அவரின் நல்லெண்ணத்தைக் காட்டவில்லை. பாவாணரின் கருத்து முடிபுகளுள் சிலவற்றை மறுப்பது அவரையே மறுத்ததாகாது. இந்நூலின் முதற்படியை அவருக்கே முதலில் தந்து பெருமிதமடைந்தேன். எனக்கு மொழியியல் வழிகாட்டியும் ஆசிரியரும் அவர் என்பதால், எனக்குள்ள கருத்து வெளிப்பாட்டு உரிமையைச் சிறிதேனும் பயன்படுத்துவது குற்றமாகி விடுமா? தமிழ் நலக் கொள்கைப் பாதையில் நடையிடுவோரில் நானும் ஒருவன்.

இனி, இறுதியாக ஒன்று. திறனாய்வாளர் கூற்றுப்படி நான் மிகவும் பண்பட வேண்டியவனே! அத்தோடு பயன்படவும் வேண்டியவன்! 'தகுதி' என்னும் நூலுக்குத் திறன் ஆய்வு எழுதி, ஆய்வாளர் வரிசையில் இடம் பெற்றுவிட்ட தமிழ்த் திருவாளர் கு. பூங்காவனம் க. மு. அவர்கட்கு என் வணக்கமும் நன்றியும் உரியவாகுக. o

---

## அவர்தாம் அரசவை அணிசெயும் புலவர்! இவரை இன்னும் பொறுப்பதோ இயம்புக!

—க. தமிழமல்லன்.

இதுதமி ழகமா? எண்ணிப் பார்க்க...
எதுவும் செய்தே இங்கே பிழைப்பர்;
மதுவும் மாதரும் மகிழ்ந்திடக் களிப்பர்;
புதுக்கருத் தென்றே புன்மை விரிப்பர்;
வாட்டிடும் நஞ்சாம் வடமொழி தன்னை
நாட்டில் பரப்பிட நாடியே யுரைப்பர்;
வடமொழி பயின்றால் வளர்தமிழ் நாட்டில்
திடமாய் வாழ்ந்திடும் திட்டஞ் சொல்வர்;
**அவர்தாம் அரசவை அணிசெயும் புலவர்!**
**இவரை இன்னும் பொறுப்பதோ? இயம்புக!**

எங்கும் எதிலும் இனித்திடும் தமிழே!
தங்கும் வகையினைக் காண்கிறார் நல்லோர்;
'வழக்கு மன்றில் வண்டமிழ்த் தீர்ப்புரை
வழங்கின் அதனை வாங்கிக் கிழிப்பேன்'
என்பவ னெல்லாம் அரசவைப் புலவன்
என்றால் இதுதான் உயர்தமிழ் நாடா?
இதுதான் நம்தமிழ் நாடா?
புதுமை நாடும் தமிழரே, புகல்வீரே!

www.thamizham.net - Free E book No 7506

# மிகையுணர்ச்சிகளும் பதற்றங்களும்

—பேரா. அ. பசுபதி, க. மு.

தொய்வகக் (Rubber) கயிறொன்றின் இரு மூலைகளையும் பிடித்து எதிரெதிர்த் திசைகளில் இழுக்கிறோம். அக் கயிறு விறைப்புற்று ஆற்றலை உள்ளடக்கியதாய் மாறுகின்றது. இன்னும் சற்று இழுக்கிறோம்; அறுந்து போய் விடுகிறது. மாந்தனின் மனத்தின் கண் எழும் உணர்ச்சியும் இத் தொய்வகக் கயிறு போன்றதே ஆகும்.

இந்திய நாட்டின் மருத்துவக் கல்விக்கு உளவியல் பாடம் தேவையில்லை என்று ஒரு காலகட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாம். மனநல மருத்துவருக்கே அக் கல்வி தேவை யெனவும், உடல்நல மருத்துவப் பயிற்சி பெறுவோருக்கு அது தேவையற்றதென்றும், மருத்துவக் கல்வித் திட்டம் தீட்டுநர் குழு முடிவெடுத்ததாம். ஆனால், இன்று உடல்நலமற்று வாடுவோரில் பலர், மனநலத்தில் ஏற்படும் குறைகளில் ஒன்றான **மிகையுணர்ச்சி** அல்லது **மனத்தாக்கலைவு** (Mental Tension) என்னும் நோய் போலும் மனச் சிக்கல்களாலும் அந்நலக் குறைவை அடைகின்றனர் என்றால் மிகையன்று.

பார்க்கப் போனால், இம் மனக் குறைபாடு அறிஞர்கள் பலரையும் தாக்கியது; தாக்கி வருகின்றது. பண்டாரகர் **சாமுவேல் சான்சன்** (Dr. Samuel Johnson) பற்றி அனைவரும் அறிவர். 1709-ஆம் ஆண்டு முதல் 1784 வரை வாழ்ந்த அந்த அறிஞர் எந்த அளவு ஆங்கிலேயரால் போற்றப் பெற்றார் என்பதற்கு, அவர் போல எழுதப்படும் ஆங்கில மொழிநடை மரபுக்கு ஆங்கிலத்தில் 'Johnsonese' எனும் பெயர்ச் சொல் வழங்கி வருவதே போதுமான சான்றாகும். அத்தகைய அறிஞரே, வாழ்நாளெல்லாம் கற்பனையான நோய்களால் தாக்கப் பெற்று வாழ்ந்தாராம். மனநலக் குறைவாலும் மிகையுணர்ச்சிகளின் அழுத்தத்தாலும் பலமுறை நோய் வாய்ப்பட்டு வாழ்ந்தாராம். 1755-ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்ற ஆங்கில அகரமுதலியால் அவர் பெற்ற புகழ் இவ்வையகம் அறிந்ததே. இருப்பினும் அவரால் முழுமையான அமைதி வாழ்வு வாழ இயலவில்லை என்றால், அறிவு நலத்தைக் காட்டிலும் மனநலந்தான் மிக முகாமையானது என்றுதானே பொருள்?

தமிழ்மறை தந்த திருவள்ளுவர் மனநலம் தொடர்பாக இயற்றியீந்துள்ள இரு குறட்பாக்கள்,

"மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்" (சிற்றினம் சேராமை-7)

www.thamizham.net - Free E book No 7506

"மன நலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்
இன நலத்தின் ஏமாப் புடைத்து" (அதே அதிகாரம்-9)

என்பன. இக் குறட்பாக்கள் இடம் பெற்றுள்ள அதிகாரத்தின் பெயர் 'சிற்றினம் சேராமை' என்பது. 'மன நலம் பேணல்' என்றுங் கூட இவ்வதிகாரப் பெயர் விளங்கலாம் என்பதை இவ்வதிகாரத் தின் குறட்பாக்களைக் கூர்ந்து கற்போர் உணர்வர். மன்னுயிர்க்கு மன நலம் ஆக்கம் தரும் என்பது எளிதில் உணரலாகின்றது. 'மன நலத்தின் ஆகும் மறுமை' என்பதை ஆழ்ந்து நோக்கும் பொழுது, இயல்பியல் கடந்த ஏதோ வோர் உண்மையை (Psychic fact) வள்ளுவர் கூற வருகிறார் என்று மட்டும் விளங்குகின்றது; இச் செய்தி மேலும் ஆய்வதற்குரியது.

'பதறுத செயல் சிதறுது' என்பது ஒரு தமிழ்ப் பழமொழி. இந்தப் பதற்றம் என்பது, விரைவோடும் பொறுமையின்மையோடும் தொடர்பு கொண்டதேனும் மிகையுணர்ச்சி அல்லது மனத்தாக் கலேவோடு (Mental Tension) மிகவும் தொடர்பு கொண்டது எனலாம்.

ஒருவர் தம் மனத்தில் இந்த மிகையுணர்ச்சிக்கு ஏதோவொரு வகையில் இடம் கொடுப்பதனுல், மிகுதியான களைப்பும் முழுச் சோர் வும் (Exhaustion) ஏற்படுவது மட்டுமின்றி,

1. உறக்கம் கெடும். ஆழ்ந்த உறக்கம் ஏற்படாது.
2. தலைவலி; குறிப்பாக ஒற்றைத் தலைநோவு (Migraine( அடிக்கடி ஏற்படும்.
3. வயிற்றுப்புண் (Stomach Ulcers) தோன்றக் கூடும்.
4. மிகை அரத்த அழுத்தம் (High Blood Pressure) ஏற் படும்.
5. நெஞ்ச நோய் ஏற்படலாம்.

இவை மட்டுமின்றி மேலும் சில விளங்க வியலாத சிறு நோய் களும், மிகையுணர்ச்சிகளாலும் பதற்றங்களாலும் ஏற்படக்கூடும் என மருத்துவ அறிஞர்கள் கருதுகின்றனர்.

அவர்களுள் ஒருவரான மருத்துவர் **ஓ. பி. சிக்கி** என்பவர் இது பற்றிக் கூறுகையில் (Dr. O. P. Jaggi, 'Mental Tension and its cure'—பக். 26-27); மனத்தில் இந்த மிகையுணர்ச்சி அல்லது பதற்ற நிலை நீடிக்குமானுல் உடலில் முழுச் சோர்வுணர்வு ஏற்படும் என்கிறார்; இந்த உடற் சோர்வுணர்வுதான் மன இறுக்கத்திற்கான (Mental stress) முதற் குறிகளுள் ஒன்ருகும் என்றும், உடலில் பல்வேறு நோய்கள் இடம் பெறப் போகின்றன என்பதற்கு முன்

www.thamizham.net - Free E book No 7506

னெச்சரிக்கையாகவே முழு உடற் சோர்வு—உணர்வு 'நிலையில் தோன்றுகின்றது எனவும், உடலை உணர்ச்சிகளின் இறுக்கத்தால் விளையும் நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவே இச் சோர்வு (Physical exhaustion) ஏற்படுகின்றது என்றும் கூறுகின்றார்.

நாம் வாழும் அறிவியல் ஊழியில்தான் இத்தகைய மனச் சீர்கேடுகள் தோன்றுகின்றன என்பதில்லை. முற்காலத்திலும் இவை தோன்றத்தான் செய்தன என்பதற்குக் கழகக்காலப் பாடல்கள் சிலவும் திருக்குறட் பாக்கள் சிலவும் சான்று பகிர்கின்றன. முன்னர் வாழ்ந்திருந்த பெரியோர் காலத்தில் எத்தனையோ போர்கள் நிகழ்ந்திருக்கின்றன. மாந்த அரத்தம் மிகுதியாகப் போர்களுக்கு விருந்தாயிருக்கிறது. பன்மொழிப் புலவர் **கா. அப்பாதுரை**யாரின் **'தென்னாட்டுப் போர்க்களங்கள்'** எனும் தமிழ்நில வரலாற்று நூலை ஒருமுறை படித்துப் பார்த்தால் இவ்வுண்மை தெற்றெனப் புலனாகும். அக் காலத்தில் மாந்தன் மிகுதியாகப் புறநிலைப் போராட்டங்களில் தாக்கப்பட்டான். இக் காலத்து மாந்தன் மிகவும் அகநிலைப் போர்களால் தாக்கப்படுகின்றான். வேறுபாடு அவ்வளவே.

அதனால்தான் அக்காலப் புலவரும் பாவலருமான பக்குடுக்கை நன்கணியார்,

> 'இன்னா தம்மஇவ் வுலகம்
> இனிய காண்கிதன் இயல்புணர்ந் தோரே'  (புறம். 194)

என்று பாட நேர்ந்தது. இக்கால மாந்தர் வாழ்வில் அகநிலைப் போராட்டம் நிகழ்கின்றது. 'எந்த அளவுகோல் கொண்டே அளப்பது' என்ற சிக்கல் இன்று நிகழ்வதைப் **பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் 'கனிச்சாறு'** பாடல் ஒன்று ஒளிப்படம் பிடித்துக் காட்டுகின்றது. இன்று கூறப்படும் கூற்றுகள், அறிவிக்கப்படும் அறிக்கைகள்—செய்திகள் 'இவற்றுள் எது உண்மை என்பதை எவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது?'

> 'அனைவரும் தம்மையே அறிஞர் என்கிறார்!
> அனைவரும் தம்மையே ஆய்வாளர் என்கிறார்!
> அனைவரும் தம்மையே நேர்மையர் என்கிறார்!
> அனைவரும் தம்மையே அழுக்கிலார் என்கிறார்!
>
> . . . . . . . . . . . .
>
> திருட்டில் வலுத்துவன் திருட்டை ஆய்கிறான்;
> குருட்டுக் கண்ணனே குருடா என்கிறான்;
> புரட்டனே பிறரைப் புளுகர் என்கிறான்;
> அரட்டை அடிப்பவன் அறிஞனாய்த் திரிகிறான்;
> எந்த அளவுகோல் கொண்டே அளப்பது?
> எவரதை அளந்தே எவருக் குரைப்பது?'
> (கனிச்சாறு : முதல் தொகுதி : பா. 152)

www.thamizham.net - Free E book No 7506

'மெய்ப்பொருள் காண்பது அறிவு' (திருக்குறள்: பாக்கள்-355, 423) என்பது சரியே. ஆனால் அந்த அறிவுங் கூட இன்றைய மனப் போராட்டத்தின் முன் மண்டியிட்டுவிடும் போல் உள்ளதே.

எனவேதான் மிகையுணர்ச்சிகளும் பதற்றங்களும் நம்மைத் தாக்காமல் நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டியுள்ளது. உணர்ச்சிகளை அடக்குவதால் மட்டும் மனச் சமநிலையை அடைந்துவிட முடியாது. அடக்கப்படும் உணர்ச்சிகள் (Repressions) என்றேனும் ஒரு நாள் பேருருக் கொண்டு புறம் போந்து அடக்கியாண்டவன் என்று தன்னைக் கருதிக் கொண்டிருந்த மாந்தனையே சீரழித்து விடும். அல்லது காலங் காலமாக அடக்கப்பட்டு வரும் வளர்ச்சிக் கரு முதிர்ந்து அழிவைத் தோற்றுவிக்கும் புறச் செயலாக உருவெடுத்து விடும்.

இது பற்றி ஆய்ந்த **சிக்மண்ட் ஃபிராய்டு** என்னும் மேலை உளவியலின் தந்தை—பாலுணர்வையே மன வியலின் அனைத்துச் சிக்கல்களுக்கும் அடிப்படையாக வைத்தார். அவர் மாணவரும் பின்னர் உளவியல் துறையில் உலகப் புகழ் பெற்றவருமான **கார்ல் எசு. யங்** (Carl S. Jung) என்னும் அறிஞர் ஃபிராய்டின் அணுகு முறையினின்று வேறுபட்டார். மாந்தர் மனச் சமநிலை பெற்றிலங்குவதற்கான தமது ஆய்வுக் கோட்பாட்டிற்குத் 'தனி மாந்தத் தன்மை' என்று பெயர் தந்தார். தனித் தன்மை (Individuality) அளித்தலைப் பற்றிக் கூறுவதால் இக் கொள்கைக்கு 'Individuation' என்று பெயர். இதற்குத் 'தன்னாய்வு' என்றும் பெயர் தரலாம்.

மன நலத்தில் மாந்தன் வளர்ச்சியடைய வேண்டுமானால், மாந்தன் தன் மனத்தின் துணைக் கொண்டு, ஏனைய மாந்தர்களின்று தான் எவ்வாறு வேறுபட்ட தனித்தன்மை கொண்டு விளங்குகின்றான் என்பதை ஆராய்ந்து கண்டறிதல் வேண்டும். தன் உணர்ச்சிகள் முதலான பலவற்றையும் விருப்பு வெறுப்பற்ற நிலையில் தன்னாய்வு செய்து தன்னை **உள்ளபடியே** உணர்ந்து கொள்வதே அறிஞர் யங் அவர்களின் ஆய்வுக் கருத்து ஆகும். மாந்தன் தன்னைத்தான் **உள்ளவாறே** உணர்ந்து கொள்ளாததால்—உணர்ந்து கொள்ள விரும்பாததால்—மறுப்பதால்தான் பல்வேறு மனக் கோணல்களுக்கு விருந்தாகின்றான். தன் அக—ஆழ் மனத்திலிருக்கும் தன்னைப் பற்றிய மூல வடிவத்தைக் கண்டறியத் தவறுவதாலேயே அவன் மன நோயாளி ஆகின்றான்.

அறிஞர் யங் அவர்களின் கருத்தைச் சுருங்கக் கூறுவோமாயின், 'மாந்தன் தன்னைத் தான் உள்ளவாறே அறிந்து ஏற்றுக் கொள்ளாமல், தன்னை வேறு யாராகவோ எதுவாகவோ அடை

www.thamizham.net - Free E book No 7506

# தமிழ்த் திங்கள்கள்:

—மா. பூங்குன்றன், அறி. இ; க. மு

ஒரு சிறு துளையுமில்லாத ஓர் இருட்டறையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் ஒருவனுக்கு இரவு பகல், காலம், நேரம் எதுவுமே தெரியாது. இரவு, பகல், காலம், நேரம் இவற்றை பற்றிய ஞாயிறு உதவுகிறது. இவ்வாறு ஒரு நாளில் உள்ள பகுதிகளை அறிவது போன்றே இன்றைக்கும் நாளைக்கும் உள்ள வேறுபாட்டை அறிய திங்களும், பிற விண் மீன்களும், நாண் மீன்களும் பயன்படுகின்றன. எனவே, இக்காலத்துப் பல உயர் வகைக் கடிகைகள் காலங் காட்டிக் கொண்டிருந்தாலும், நாள்காட்டிகள் நாள்களைக் காட்டிக் கொண்டிருந்தாலும் இவையனைத்திற்கும் அடிப்படையானது விண்ணியல் என்று முதலில் நாம் உணர்தல் வேண்டும்.

இதில் ஞாயிறு ஒவ்வொரு நாளையும் ஓர் ஆண்டையும் உணர்த்தும் வகையில் இயங்குகின்றது. ஞாயிறு ஒருமுறை தோன்றி மறைந்து, மறுமுறை தோன்றுவதை நாளென்றும், நம் நிலவுருண்டை ஞாயிறை ஒருமுறை சுற்றுவதை ஓர் ஆண்டென்றும் கூறி விடுகிறோம். இவ்வாறே மதி (நிலவு) ஒருமுறை தோன்றி, நாளுக்கு நாள் வளர்ந்து, பின் தேயத் தொடங்கி மறைவதை ஒரு மாதம் என்று கூறி விடுகிறோம். திங்களை வைத்து மாதத்தை மதிப்பிடுவதால்தான் திங்களுக்கு 'மதி' என்றும், அதன் வழி மாதம், திங்கள் என்றும் சொற்கள் தோன்றியது காணலாம். ஆங்கிலத்திலும் **Moon—Month** என்று தோன்றியிருப்பது இதன் வழியேதான்.

இவ்வாறு நாள், திங்கள், ஆண்டு என்று பகுத்துவிடுகிறோம் ஒரு திங்களுக்கும் மறு திங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை அறியவேண்டிய நிலை ஏற்பட்டபோதுதான் மாந்தன் விண்மீன்களின் உதவியை நாடியிருக்கிறான். விண்மீன்களைத் தனித் தனியே பார்த்து நினைவு வைத்துக் கொள்வதை விடக் கூட்டங் கூட்டமாக நினைவு வைத்துக்கொள்வதுதான் எளி

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

யாளப்படுத்திக் கொள்ள (identity) முயல்வதால்தான் மனச்சீர் கேட்டினை அடைகின்றான்' எனக் கூறி விடலாம்.

பெரும் செல்வராயினும், உயரிய அரசியல் தலைவராயினும், சிறந்த மருத்துவராயினும், வழக்கறிஞராயினும், பேரறிஞராயினும் சரியே—அடிப்படையில் அனைவரும் மாந்தரே; அவர்களும் தம்மை அறிந்து தன்னுணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு, 'மனநலம் மன்னுயிர்க் காக்கம்' என அறிந்து கொண்டு, 'வையத்துள் வாழ்வாங்கு வாழ' வேண்டியவர்களே என்பது உண்மையன்றோ! O

www.thamizham.net - Free E book No 7506

தாக இருந்தது. ஒரு நாள் ஒரு நேரத்தில் ஓரிடத்தில் தெரியும் விண்மீன் கூட்டம், மறுநாள் அதே நேரத்தில் சற்றுத் தள்ளித் தெரிந்தது. மறு திங்கள் தன் இடம் பெயர்ந்தே தள்ளிப்போய் விடுகிறது. அந்தப் பழைய குறிப்பிட்ட இடத்தில் வேறொரு விண்மீன் கூட்டம் நின்று கொண்டிருக்கிறது. மீண்டும் அடுத்த ஆண்டில் அதே திங்கள் மறுபடி ஏறக்குறைய அதே நாளில்தான் அந்தப் பழைய விண்மீன் கூட்டத்தை அதே குறிப்பிட்ட இடத்தில் பார்க்க முடிகிறது. எனவே, அந்தக் குறிப்பிட்ட விண்மீன் கூட்டம் ஆண்டுக்கொருமுறை வருகிறது என்பது மட்டும் விளங்குகிறது. இவ்வாறே ஒவ்வொருத் திங்களும் பன்னிரு வெவ்வேறு விண்மீன் கூட்டங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஓர் ஆண்டிற்குள் வந்து போகின்றன என்றும், அப் பன்னிரண்டும் ஒரே வட்டத்தில் அமைந்து விடுகின்றன என்றும் புலனானது.

இவற்றைப் பற்றிப் பழந் தமிழகத்தில் கடல் வணிகர்களே நன்கு அறிந்திருந்தனர். அதன் பின்தான் வானியல் பற்றித் தமிழர்கள் ஆராயத் தொடங்கினர். கிரேக்கர் ஆராய்ச்சி பற்றியும் நாம் அறிந்து கொள்ளும்போது, தமிழர்கள் முறைக்கும் கிரேக்கர்கள் முறைக்கும் பல பொருத்தங்களும் உள்ளதை அறியலாம்.

அடுத்து ஒவ்வொரு விண்மீன் கூட்டங்களையும் நினைவிற் படுத்தும் நிலையில் ஓரளவு பொருத்தமுள்ள உருவங்களை வைத்து நினைவில் வைத்தனர். அவ்வுருவப் பெயரையே அக் கூட்டத்திற்கும் வைக்கத் தொடங்கினர். இவ்வுருவ ஒற்றுமை கிரேக்கரிடத்தும் பெரும்பான்மை பொருந்தியதாக உள்ளது. இப் பன்னிரண்டு கூட்டங்களையே பன்னிரண்டு **ஓரைகள்** என்று வழங்கினர். இவற்றைக் கணியத்திற்கும் பயன்படுத்தினர்.

இவற்றை மட்டுமல்லாது தமிழர்கள் மற்றும் இருபத்தேழு நாண்மீன்களையும் வகைப்படுத்தினர். இவற்றின் இயக்கம் சற்று மாறுபட்டது. நாம் எடுத்துக் கொள்ளும் பன்னிரண்டு விண்மீன் கூட்டங்களான ஓரைகள் சேர்ந்த வட்டத்தை ஓரை வட்டம் (**Zodiac belt**) என்றே குறிப்பிடுவோம். இந்த ஓரை வட்டத்தின் பாதை, இயக்கம், இதனால் திங்கள்களின் பெயர்களை அமைக்கும் வகை இவற்றைக் காண்போம்.

இவ் வோரை வட்டத்தைப் பற்றித் தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர். இவ் வோரை வட்டத்தைக் கணியத்திற்குப் பயன்படுத்தி அதன் வழி நன்றும் தீதும் அமைவதாகவும் நம்பினர்.

> மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
> துறந்த ஒழுக்கம் கிழவோற் கில்லை. (தொல். பொரு. 135)

இவ் வோரைகள் ஒரு நீள வட்டத்தில் அமைந்தன. இவ்வட்டம் கதிரவனை நம் நிலவுலகம் சுற்றுப்பாதை வட்டத்தை விட மேலும்

www.thamizham.net - Free E book No 7506

கீழும் ஒன்பது ஒன்பது பாகைகள் சாய்ந்துள்ளது. ஒரே வட்டத்தில் இருந்து பன்னிரு திங்களும் சுழல்வதால் ஒரு திங்களுக்கு 30 பாகை சுற்றுவதாகக் கணக்கிட்டு ஒரு ஓரையை 30 பாகையாகக் கணக்கிடுகின்றனர். இவ்வோரைகள் எல்லாம் ஒரே அளவினதாகவும் வடிவினதாகவும் இல்லை. எனவே 30 பாகை என்பது அவ்வளவு சரியான அளவாகவும் இல்லை. இவ்வோரை வட்டத்துள் இடம் பெறும் உருவங்கள் பெரும்பாலும் விலங்குகளே. எனவே, கிரேக்க மொழியில் 'Zodiakos kyklos'—(Circle of animals) என்ற பெயருடன் வழங்கி, பின் ஆங்கிலத்தில் Zodiac Belt என்று வந்து விட்டது.

இப் பன்னிரண்டு ஓரைகளைப் பின்பற்றித்தான் தமிழ்த் திங்கள்களை அமைத்தனர். இவ்வட்டப் பாதை ஏறக்குறைய கதிரவனின் பாதையை ஒட்டி அமைந்துள்ளது. கதிரவனை நடுவாகக் கொண்டதாக நாம் பார்க்கிறோம். கதிரவனும் இவ்வட்டமும் நிலையானவை. இதற்கிடையில் நிலவுருண்டை கதிரவனைச் சிறு வட்டமாகச் சுற்றி வருகிறது. நில வுருண்டை சுற்றி வரும்போது கதிரவனை நோக்கி கதிரவனின் பின் புறம் மறையும் ஓரையை நாம் அம் மாதமாகக் குறிக்கிறோம். பன்னிரு ஓரைகளையும் பார்ப்போம்.

| ஓரை | வடிவம் | கிரேக்கப் பெயர்கள் | வடிவம் |
|---|---|---|---|
| **மேழம்** | ஆடு | Aries | The Ram |
| **விடை** (ஏறு) | ஏறு | Taurus | The Bull |
| **இரட்டை** | இருவர் | Gemini | The Twins |
| **கடகம் (அலவன்)** | நண்டு | Cancer | The Crab |
| **மடங்கல்** | அரிமா | Leo | The Lion |
| **கன்னி** | நங்கை | Virgo | The Virgin |
| **துலை** | நிறைகோள் (தராசு) | Libra | The Scales |
| **நளி (தேள்)** | தேள் | Scorpius | The Scorpion |
| **சிலை (வில்)** | வில் | Sagi ttarius | The Archer |
| **சுறவம்** (சுறு) | மீன் வகை | Copricornus | The Goat (or) The Sea Goat |
| **கும்பம்** (குடம்) | நீர்க்குடம் | Aquarius | The Water bearer |
| **மீனம்** (மீன்) | மீன் | Pisces | The Fishes |

இப் பன்னிரு ஓரைகளும் திங்களுக்கு ஒன்றாகக் கதிரவன் பின் மறைந்து அம் மாத வேறுபாட்டைக் காட்டுகிறது. ஒரு திங்களில் எந்த ஓரை கதிரவனின் பின்னால் மறைகிறது என்று நாமே கண்ணால் காண இயலும், விடியலில் கதிரவன் எழுவதற்குச் சற்று

www.thamizham.net - Free E book No 7506

முன், கடைசியாக எழும் விண்மீன் கூட்டமும், கதிரவன் விழுந்த உடன் முதல் முதலாகத் தோன்றும் விண்மீன் கூட்டமுமான ஒரு விண்மீன் கூட்டந்தான், பகல் முழுவதும் கதிரவன் பின்னால் மறையும் விண்மீன் கூட்டமாகும். இக் கூட்டத்தை வைத்துத்தான் அத் திங்களின் பெயரை அழைக்கிறோம்.

இவற்றின் இயக்கங்களிலிருந்து கணியம் பார்ப்பதற்கு எந்த வோர் அறிவியல் அடிப்படையும் இல்லை என்று வானியலார் கருதுகின்றனர்.

இனி இந்த ஓரைப் பெயர்களுக்கேற்ற திங்கள் பெயர்கள் எவ்வாறு வந்தன என்றும், இந்த வோரைகளின் அமைப்பும் இவற்றைக் காண்பதற்குரிய முறை வழிகளையும் காண்போம்.

| **ஓரைகள்** | **ஓரைகளுக்குரிய திங்கள்** | **வடமொழித் திங்கள்** | **ஆங்கிலம்** |
|---|---|---|---|
| மேழம் | **மேழம்** | சித்திரை | Apr-May |
| ஏறு | **விடை** | வைகாசி | May-June |
| இரட்டை | **ஆடவை** | ஆனி | June-July |
| அலவன் | **கடகம்** | ஆடி | July-Aug |
| அரிமா | **மடங்கல்** | ஆவணி | Aug-Sept |
| கன்னி | **கன்னி** | புரட்டாசி | Sept-Oct |
| நிறைகோள் | **துலை** | ஐப்பசி | Oct-Nov |
| தேள் | **நளி** | கார்த்திகை | Nov-Dec |
| வில் | **சிலை** | மார்கழி | Dec-Jan |
| சுறா | **சுறவம்** | தை | Jan-Feb |
| குடம் | **கும்பம்** | மாசி | Feb-Mar |
| மீனம் | **மீனம்** | பங்குனி | Mar-Apr |

பின் வரும் விண்மீன் கூட்டங்களை வேறுபட்ட நாள்களில் இரவு 9 மணிக்கு உச்சி வானில் நோக்குவோம்.

**மேழம்**

இவ்வோரை மூன்று விண்மீன்களைக் கொண்டுள்ளது. இது ஆட்டுக்குட்டியை உருவகப்படுத்துவது. இம் மூன்று விண்மீன்களும் ஆட்டுக்குட்டியின் தலையைக் குறிப்பிடுவதாகக் கூறுகின்றனர். ஆங்கிலத்தில் Aries எனப்படும் இவ்வோரை 'The Ram' என்ற பொருளை உடையது. பொதுவாக எல்லா ஓரைகளையும் காண்பதற்கு இரவு 9 மணியைக் குறித்துக் கொண்டோமானால் இம் முக்கோண வடிவான ஓரை திசம்பர் 10-ஆம் நாள்களில் உச்சிக்கருகே தெரியும்.

www.thamizham.net - Free E book No 7506

**விடை**

'V' வடிவில் வருகிற இந்த விடைக் கூட்டம் விடையின் தலைப் பகுதியையும் கொம்புகளையும் குறிக்கிறது. இதை ஆங்கிலத்தில் Taurus என்று குறிக்கிறார்கள். இதன் பொருள் 'The Bull'. இக் கூட்டம் சனவரி 15-ஆம் நாள்களில் உச்சி வானில் தெரியும்.

**இரட்டை**

இவ்வோரை இரு இணை கோடுகளால் அமைந்தது. இக் கோடுகள் இரு சிறுவர்களாக உருச் செய்யப்படுகின்றன. அந்த இரட்டைச் சிறுவர்கள் தோள் மீது கையைப் போட்டுக் கொண்டு நிற்கின்றனர் பெப்ருவரி 20-ஆம் நாள்களில் உச்சி வானில் தெரியும்.

**கடகம்**

நண்டு வடிவில் உள்ளது இம் மீன் கூட்டம். இரட்டை மீன் கூட்டத்திற்கு மேல் புறத்தில் சற்றுத் தள்ளியுள்ளது. இது மற்றக் கூட்டங்கள்போல் மிக ஒளியுடைய விண்மீன்கள் அடங்கிய கூட்டம் அன்று. சற்று உற்று நோக்கியே பார்க்கவல்லது. சதுரம் போன்ற நான்கு விண்மீன்களைச் சுற்றி ஐந்து கால்களுடைய அமைப்புடையது. மார்ச்சு 15-ஆம் நாள்களில் உச்சி வானில் தெரியும்.

**மடங்கல்**

அரிமா வடிவம் கொண்டது இம் மீன் கூட்டம். தெள்ளத் தெளிவாகவும் அழகாகவும் வடிவமுடன் இக் கூட்டம் வெறுங் கண்ணில் தெரிகிறது. ஏப்பிரல் 10-ஆம் நாள்களில் நடு வானில் நிற்கும்.


**கன்னி**

ஏறக்குறைய அரை வானை அடைத்துக் கொள்ளும் நீளம் மிகுந்த கூட்டம் இது. இதைக் கன்னிப்பெண் உருவமாக உரு வமைக்கின்றனர். எனினும் கன்னி என்ற இப் பெயரில் இதே கூட் டத்தை நம் பழந் தமிழர்கள் எவ்வாறு உருவமைத்தனர் என்று சரியாகத் தெரியவில்லை. இது மே 25-ஆம் நாள்களில் உச்சி வானில் நிற்கும்.

**துலை**

இம் மீன் கூட்டம் நான்கு விண்மீன்களை சாய்சதுர வடிவத்தில் கொண்டது. இக் கூட்டத்தை நிறைகோள் என்று எவ்வாறு வடி வமைத்தனர் என்று புரியவில்லை. பழங்காலத்துப் பயன்படுத்திய 'தூக்கு' போன்ற அமைப்பில் இது அமைந்திருக்க வேண்டும் எனப் படுகிறது. சூன் 20-ஆம் நாள்களில் இது நடு வான் கோட்டை அடைகிறது.

www.thamizham.net - Free E book No 7506




கதிரவனும், ஞாலம் பன்னிருமனையும்

**நளி**

அனைத்து விண்மீன் கூட்டங்களினும் மிக அழகானதும் தெளிவானதும் இந்த நளிக் கூட்டம் ஒன்றே. தேள் வடிவமான இக் கூட்டம் தென் புறம் சாய்ந்த நடுவானில் சூலை 20-ஆம் நாள்களில் தெரியும். இக் கூட்டத்தில் தேள் உருவத்தின் வயிற்றுப்புறத்தில் மிக ஒளியான விண்மீன் தெரிகிறது. இதன் பெயர் 'அண்டாரிசு'. இதுவரை கண்ட மிகப் பெரிய விண்மீன்களில் ஒன்றுதான் இது. கதிரவனையும் அதைச் சுற்றி வரும் இவ்வுலக உருண்டையின் பாதை வட்டத்தையும் தன் அரை வட்டத்திலேயே விழுங்கவல்லது இம்மீன்.

**சிலை**

வில்லும் அம்பும் கொண்ட வடிவத்தில் இம் மீன் கூட்டம் அமைந்திருக்கிறது. இதுவும் மிக எளிதில் அடையாளம் கண்டு கொள்ளவல்லது. நளியின் வால் புறத்தில் உள்ள விண்மீன் கூட்டம் ஆகஃசுடு 20-ஆம் நாள்களில் நடுவானில் நிற்கும்.

**சுறவம்**

இம் மீன் கூட்டம் ஒரு சுரு மீனைக் குறிக்கிறது. அதனுடைய சரியான வடிவம் நமக்குக் கிடைக்கவில்லையாயினும், இஃது ஒரு குறியீடாக உள்ளது. இக் கூட்டத்தைச் செப்தம்பர் 20-ஆம் நாள்களில் நடு வானில் காணலாம்.

**கும்பம்**

குடம் என்ற உருவத்தைக் குறிக்கக்கூடிய இவ்விண்மீன் கூட்டம் சரியான வடிவமற்று உள்ளது. கிரேக்கர்கள் இதை ஓர் ஆள் ஓடுவதாக உள்ள வடிவம் கொடுத்து, 'தண்ணீர்ப் பையன்' (Water bearer) என்ற பெயர் இட்டுள்ளனர். அக்தோபர் 10-ஆம் நாள்களில் நடுவானை அடைகிறது.

**மீனம்**

மீன் கூட்டங்களை வடிவமாகக் கொண்ட விண்மீன் கூட்டம் என்று வடிவமைக்கப்படுகிறது. மீன் கூட்டங்களை நாம் எப்படி வேண்டுமானாலும் உருவமைத்துக் கொள்ளலாம் அன்றோ? நவம்பர் 20-ஆம் நாள்களில் இது நடுவானை அடைகிறது.

இவ்வோரைகளை இடங்காண பிற்காலப் பழம் பாடல் ஒன்று கிடைக்கிறது. ஆனால் இதில் கோள்களையும் மீன்களையும் மாறி மாறிக் கூறுகிறார் இப் பாடல் ஆசிரியர்.

அதிகவுச் சந் தனையுரைக்கிற் கதிரவனுக்குத் தானை
மேடந்தனிலே பாகையொரு பத்தா
மதி தனக் கேரிடபத்திற்றன் மூன்றுபாகை வருஞ்சேய்க்கு
மகரத்தி லிருபத் தெட்டாகுந்

www.thamizham.net - Free E book No 7506

துதிபுதற்குக் கன்னியினிற் பதினைந்து பாகைசெவ்வாற்
குருவுக்கே கடகந் தனி லைந்து பாகை
புதிய புகர்க்கே மீனி லிருபத் தேழ் பாகை புகழ்ச் சனிக்கு
கோலிலிருபது பாகை யென்பார்.

(சாதக சிந்தாமணி. 129)

இக் கட்டுரை வழி, தமிழர்களின் அக் காலத்து திங்கள் பகுப்பு முறையையும், பொதுவாகப் பன்னிரு ஓரைகளின் வடிவங்களையும், அவை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தோன்றுவதைக் காணும் முறைகளையும் கண்டோம். **இத் திங்கள் பெயர்கள் இன்றும் மலையாளத்திலும் பிற திரவிட மொழிகளிலும் வழங்குவதைக் காணலாம்.** இதேபோல் நாண்மீன்களின் வரிசையையும் தோற்றத்தையும் கூட நாம் அறிந்து கொள்ள முடியும்.

**பட விளக்கம் :** ஞாயிற்றை நாம் சுற்றி வரும் பாதையும் ஓரை வட்டமும் :

கதிரவனும் ஓரை வட்டமும் நிலையானவை என்று கொள்ளும்போது உலக உருண்டை மட்டும் சுற்றி வருகிறது. கதிரவனின் பின் மறையும் ஓரையை வைத்துத் திங்கள் குறிப்பிடப்படுவதை அம்புக்குறி காட்டுகிறது. படத்தில் உள்ள நிலைகளித் திங்களைக் காட்டுகிறது. உலகம் கதிரவனை வலமாக (எதிர்கடிகைச் சுற்றாக — anti-clockwise)ச் சுற்றி வருகிறது என்பதை அறிதல் வேண்டும்.

---

உங்கள் இல்லப் பொத்தகப் பேழைக்கான படிகளை வாங்கி விட்டீர்களா? இல்லையேல் இன்றே வாங்குங்கள்.

## பெருஞ்சித்திரனார் பாடல்கள் - கனிச்சாறு

### அரிய பாடற் களஞ்சியம்

தொடக்க காலத்திலிருந்து 1978-ஆம் ஆண்டு வரை முகாமையான அனைத்துத் தாள்களிலும் வெளிவந்த மற்றும் வெளிவராத ஏறத்தாழ 1800 வரிகள் கொண்ட ஆயிரக்கணக்கான பாடல்கள் மூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

| | | |
|---|---|---|
| **முதல் தொகுதி** | **உரு.** | **16—00** |
| **இரண்டாம் தொகுதி** | ,, | **11—00** |
| **மூன்றாம் தொகுதி** | | **17—50** |

பதிவஞ்சற் செலவுடன் மூன்று நூல்களையும் நூலஞ்சலில் விடுக்க ; உரு. 47—50

**விவரங்கட்கு : தென்மொழி, சென்னை-5.**

---

www.thamizham.net - Free E book No 7506

# ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்

மருத்துவ அறிஞர். கோ. கோவிந்தனார்.

ஒரு தந்தை தம் மகனின் கலவி உறுப்புகளிலோ, அல்லது ஒழுக்க முறையிலோ இயற்கையாகவோ வேறு வகையாகவோ மாற்றங்கள் கண்டால், அவற்றைச் சரி செய்ய உடனே மருத்துவரின் உதவியை நாட வேண்டும். பால் மருத்துவம் செய்வதில் வல்லுநரிடம் தம் மகனை அழைத்துச் சென்று முழுமையும் நன்ருக ஆய்வு பெறச் செய்தல் ஒரு தந்தை தம் மகனுக்குச் செய்யும் கடமைகளில் ஒன்ருகும். ஐந்தில் வளைத்தல் மிக எளிதில்லையா. இது பற்றி ஒவ்வொரு தந்தையும் மிக விழிப்பாக இருக்க வேண்டும். பெற்றுவிட்டால் மட்டும் போதுமா. பேணி வளர்க்கத் தெரிய வேண்டாமா?

கட்டுப்பாட்டு முறையை நல்ல இளமைக் காலத்தில் கூட கைக் கொள்ள வேண்டும். கலவி வேலைகள் ஒரே சீராக, ஓர் ஒழுங்கு முறைக்குக் கட்டுப்பட்டு நடத்தப்படல் வேண்டும். கவலையைத் தள்ளி எப்பொழுதும் இன்பத்துடன் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். புணர்ச்சி செய்தல் இன்பம் தருவதாக இருக்க வேண்டுமே அல்லாது ஒரு சுமையாக இருக்கக் கூடாது. கணவனும் மனைவியும் தங்களுக்குள் ஒத்துப் பேசி, எந்நிலை, தங்களுக்கு உண்மையிலேயே இன்பம் பயக்கும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். கலவித் தடை முறையையும், கலவி ஒதுக்க முறையையும், ஒதுக்க வேண்டும். கலவி உறுப்புகளிலோ அல்லது வேலைகளிலோ சிறு கோளாறு கண்டாலும் உடனே மருத்துவம் செய்து கொள்ள வேண்டும். இல்லையானுல் அக் கோளாறுகள் முற்றிப் பெரிய சிக்கல்களை உண்டாக்குகின்றன. இரவு தூக்கத்தில் ஒளிநீர் வெளியேறுதல், அளவுக்கு மீறி, அடிக்கடி நிகழுமானுல், ஏதோ கோளாறு ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். உடனே அதைச் சரி செய்ய முயலவேண்டும். வெள்ளை நோய் கண்டிருந்தால், அதை உடனே அடித்துத் துறத்த மருத்துவம் செய்ய வேண்டும். குறிப்பாகச் சிறுநீர் புற வழியின் பின் பகுதியிலிருந்து வெள்ளை நோயை அறவே அகற்ற வேண்டும். இல்லையாயின் அது முற்றிப் புராசுடேட் அழற்சியை உண்டாக்கும். புராசுடேட் அழற்சி உண்டானுல் அலித்தன்மை ஏற்பட்டே தீரும். இதில் எவ்வகை ஐயத்திற்கும் இடமே இல்லை.

## காம மூட்டிகள்

மாந்த குலம், தீமையே இல்லாத நன்மையே பயக்கவல்ல காம மூட்டியைத் தேடி அன்றும் இன்றும் அலைந்த வண்ணமிருக்கிறது;

www.thamizham.net - Free E book No 7506

இனி என்றும் அலேயும் என்பதையும் உறுதியாகக் கூறலாம். தற்கால மாந்தனிலிருந்து, நிலவு மண்டலத்தைப் பிடிக்க முயலும் இன்றுள்ள மாந்தன் வரை கைக்கொண்ட, கைக்கொள்ளும், மருந்துகள்,மாயங்கள், கட்டுகள் (தாயத்துகள்), கவர்ச்சிகள், கற்கள், எலுபபுகள் அப்பப்ப! கணக்கில் அடங்கா. விலேயுள்ள கற்கள், நிலத்தில் புதைக்கப்பட்டுள்ள விலங்குகளின் எலும்புகள், பாம்பின் கொம்பு, கன்னிப் பெண்ணின் குருதி, முழு நிலவில் தேரையைக் கொண்டு செய்யும் புதுமையான ( டங்கு முதலியவை காம முட்டும் வன்மை உடையன என்று ஒரு காலத்தில் நம்பப்பட்டது. மற்ெருரு காலத்தில் அந்நினேப்பு மறுக்கப்பட்டது.

காம முட்டி என்ருல் என்ன? கலவி உணர்ச்சியை உண்டாக்கக்கூடிய, அல்லது தூண்டக்கூடிய அல்லது இவ்விரண்டையும் செய்யக்கூடிய பொருள் அல்லது காரணம், அல்லது வழி காம முட்டி எனப்படும். ஒவ்வொரு காம முட்டியும் ஒவ்வொரு வழியில் வேலே செய்யும். சில புணர்ச்சிக்கு வேண்டிய கலவிக் கிளர்ச்சியை மட்டும் தூண்டும். கலவி உறுப்புகள் நன்னிலேயில் இருக்குமாயின் புணர்ச்சி வெற்றியாக நிறைவேற இதுவே போதுமானது. சில ஆண்குறியை எழுச்சியுறச் செய்கின்றன. சில ஆண்குறியை உறுதி உடையதாகவும், எழுச்சி மிகுந்த நேரம் இருக்கும்படியும் செய்கின்றன. சில உடல் வன்மையை மிகுதியாக்குகின்றன. சில தங்கும் ஆற்றலே மிகுதியாக்குகின்றன. சில முழுமையான கலவிக் கிளர்ச்சியை தூண்டி, ஒளிநீர் வெளியேற உதவுகின்றன.

அலித்தன்மை உடையவர்களுக்குக் காமமுட்டிகள் பயன்படுத்தப் படுகின்றன. பயன்படுகின்றனவா அல்லவா என்பது பற்றி மருத்துவர்கள் மாறுபட்ட எண்ணங்களே வெளியிடுகின்றனர். சிலர், அலித்தன்மைக்கு மருத்துவம் செய்யும் பொழுது காமமுட்டிகள் எவ்வகையிலும் பயன்படுவதில்லே என நினேக்கின்றனர். சிலர் பிற மருந்துகளுடன் காமமுட்டிகளும் அலித்தன்மையைப் போக்கப் பயன் படுகின்றன என நினேக்கின்றனர். எவர் என்ன சொன்னுலும் சரி, **இப்பொழுதுள்ள காமமுட்டிகளில் ஒன்றேனும், நாம் நினேத்துக் கொண்டிருக்கிருேமே, எதோ நன்மை செய்கிறது என்று அந்த நன்மையை அது செய்வதே இல்லே. எல்லாம் வெறும் ஆரவாரம்.** இதில் ஐயத்திற்கு இடமே இல்லே இது முழுக்க முழுக்க உண்மை. இதை யாரும் மறுக்க முடியாது. தனிப்பட்ட விரல் விட்டு எண்ணக்கூடிய, ஒரு சிலருக்கு இக்காமமுட்டிகளால் நன்மை ஏற்பட்டிருக்கலாம். அதற்காக எல்லாரும் நன்மை பெறுவர் என்று கூற இயலாது. ஆண்மையை நிலேநிறுத்தும் மருந்து அல்லது மருத்துவம் காமமுட்டி வகையைச் சார்ந்ததுதான் எனச் சிலர் நினேக்கின்றனர். ஆனுல் இந்நினேப்பு உண்மைக்குப் புறம்பானது.

காமமுட்டி அல்லாத மருந்துகள் அலித்தன்மை ஏற்படக்காரண

www.thamizham.net - Free E book No 7506

மானவற்றைத் தாக்கி, வெற்றி கொண்டு ஆண்மையை நிலைநாட்டுகின்றன. இந்நன்மை மறைமுகமாக உண்டாகிறது. காமமூட்டி, எந்த உறுப்பு தாக்கப்பட்டிருக்கிறதோ அந்த உறுப்பின் நரம்பு நடுவத்தைக் கிளர்ச்சி பெறச் செய்து, விரும்பியபடி அந்த உறுப்பை வேலை செய்யச் செய்கிறது. உறுப்பு தளர்ந்த நிலையில் உள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அந்த உறுப்பு இயற்கையாகச் செய்யக்கூடிய வேலைக்குக் கூட இப்பொழுது தூண்டுகோல் வேண்டப்படுகிறது. ஆகவே வேலையின் முடிவில் உறுப்பு மேலும் மிகுதியாகக் களைப்பை அடைகிறது. களைத்த உறுப்பைக் காமமூட்டி கொண்டு தூண்டுவதற்குப் பகரமாக அந்த உறுப்பின் களைப்பிற்குக் காரணமானவற்றை நீக்கிவிட்டால், அந்த உறுப்பு தன் இயற்கை நிலையை அடைந்து, தன் வேலையை ஒழுங்காகச் செய்யும். வெளியிலிருந்து தூண்டுகோல் வேண்டற்பாலதன்று. ஆகவே காமமூட்டிக்கு இங்கு வேலையே இல்லை என்பது சில மருத்துவர்களின் எண்ணம். இவர்கள் நினைப்பிலும் சிறிது உண்மை இருக்கத்தான் செய்கிறது. எல்லா வகை அலித்தன்மையும், உறுப்பின் அல்லது உடலின் வன்மைக் குறைவால் உண்டாகிறது எனப் பிழைபட இம்மருத்துவர்கள் நினைத்திருக்கின்றனர். உறுப்புகள் நன்னிலையில் இருந்தும், கலவி விருப்பம் இல்லாது இருக்கலாம். கலவி விருப்பத்தைத் தூண்டக்கூடிய ஒரு பொருள் இருக்குமானால் வாளா விருந்த உறுப்பு கிளர்ச்சி பெற்றுத் தன் இயற்கை வேலையைச் செய்யத் தொடங்குகிறது. இதை மனத்தில் கொண்டு காமமூட்டிகளைப் பயன்படுத்த வேண்டும்.

காமமூட்டிகள், அளவிற்கு மேல் சிறிது கூடினாலும். போதும். கேடு விளைவித்துவிடும். காமமூட்டிகளில் பெரும்பான்மையானவை கொடிய நச்சுத் தன்மை உடையனவும், மயக்கம் தரும் தன்மை உடையனவும் ஆம். அதனால் மருத்துவர் மூலமன்றித் தனக்குத் தானே, காமமூட்டிகளைப் பயன்படுத்துவது, கேட்டை விலைக்கு வாங்குவதோடு ஒக்கும். காமமூட்டியின் தன்மையை அறிந்து கொள்வதால் குற்றமில்லை. அதைத் தனக்குத்தானே பயன்படுத்த முயல்வதுதான் குற்றம். ஏன். எனில் ஒவ்வொருவருக்கும் என்ன அளவுதான் கொடுக்க வேண்டும் என்பது அதில் நன்கு பழக்கப் பட்ட மருத்துவ வல்லுநரே அறிய முடியும்.

ஒரே நாளில் இழந்த ஆண்மையை அடையுங்கள் போன்ற விளம்பரங்களில் காணப்படும், மாத்திரைகளும், மருந்துகளும், பெரும்பான்மையாக உண்மையாகவே கேடு பயப்பன. சில வேளைகளில் அவற்றில் எவ்வகை மருத்துவத் தன்மையுமே இருப்பதில்லை. உப்பு, கரி போன்ற பொருள்களே இருக்கும். இவற்றை உண்டாக்க மிக மிகக் குறைந்த செலவே ஆகும். ஆனால் விற்பதோ பல உருபாக்கள். பணத்தை வீணாக்காமல் இருப்பதற்காகவாவது அவற்றை வாங்காது இருக்க வேண்டும்.

www.thamizham.net - Free E book No 7506

# புத்துலகம் பூப்பதெந்நாள்?

—கு. இராசேந்திரன், க. மு.

ஆரியர்கள் இந்நாட்டில் அடிவைத்த நாள்முதலாய்ப்
பூரிகளும் வாரிகளும் புராணத்துக் குப்பைகளை
மாரியெனப் பொழிவித்து மடமைகளை விளைவித்துப்
பேரியக்கம் இன்றைக்கும் பெரிதும் நடத்துகின்றார்!

வானொலியில் திரைப்படத்தில் வளமான இதழ்த்துறையில்
தேனொலியை விளைக்காமல் தீங்குசெயும் புராணமதக்
கூனொலியால் குமுகாயக் கேட்டினையே செய்கின்றார்.
ஏனவர்கள் இத்தகைய இழிசெயலைச் செய்கின்றார்?

மொழிப்பற்றும் இனப்பற்றும் முழுவதுமே இல்லாத
விழிப்பற்ற தமிழினத்தால் விடியுமட்டும் உண்ணுதற்குப்
பழிப்புற்ற வடமொழியாம் 'பாடை' யினில் கூச்சலிட்டுச்
செழிப்புற்று வாழுகின்ற செயலையார் தடுத்திடுவார்?

வழுவழுப்பு அட்டையினில் வளமான மங்கையரின்
கொழுகொழுத்த மேனியினைக் கூலிக்குப் போட்டிங்கே
புழுபுழுத்த குமுகாயப் போக்குக்கு ஏற்றாற்போல்
தழுதழுத்த குரலோடு தவிப்போரைச் சுரண்டுகின்றார்!

பார்ப்பனர்கள் படைதாங்கும் பலதுறைதான் இன்றைக்கும்
ஆர்ப்பரித்துப் புராணமத அடிமடயக் கருத்தினைத்துப்
போர்ப்பாட்டுப் பாடிக்கொடும் புன்மைதனைக் குவிக்கிறது.
ஊர்ப்பாட்டுக் குழைக்கின்ற உளத்தவர்கள் உணர்ந்திடுக!

பகைவரெனப் பார்ப்பனரைப் பறைசாற்றி மயர்விளக்கும்
முகையவிழ்ந்த கருத்தினுக்கு முடுக்கத்தை ஏற்றிவிடத்
தொகையாகத் தீந்தமிழால் தொடுக்கின்றேன் கணைகளென
நகையாமல் நாட்டுநலம் காத்திடுவார் எண்ணிடுக!

ஈங்கிவரை எதிர்க்காமல் இடுப்பொடித்து வீழ்த்தாமல்
தூங்குகின்ற புரட்சிக்குத் தோள்கொடுக்க முன்வருதல்
தேங்கிநின்ற சாய்க்கடையில் தேனூற்றி நக்குகின்ற
மூங்கையராம் மாந்தர்களின் மூளையற்ற செயலொக்கும்!

எத்துறையில் எழுச்சிதனை இணைத்துவிட முனைந்தாலும்
அத்துறையில் அவ்வடிவில் ஆரியமே பதுங்கிவந்து
பித்தெறிய முனைவதனைப் பிழையென்று எவருரைத்தார்?
முத்தமிழர் நாட்டகத்தின் முழுமைவர லாறிஃதே!

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

மருத்துவம் தோன்றியதிலிருந்து இன்று வரை கூறப்பட்ட காமமூட்டிகளின் எண்ணிக்கைக்கு ஓர் அளவே கிடையாது. ஆனால் அவற்றில் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலவே புகழ் உடையன.

(தொடரும்)

www.thamizham.net - Free E book No 7506



நூல் : **அர்த்தமற்ற இந்து மதம்.** (கண்ணதாசனின் 'அர்த்தமுள்ள இந்து மதம்' எனும் நூலுக்கு மறுப்பு நூல்.)

ஆசிரியர் : **மஞ்சை—வசந்தன்.**

விலை : **உருபா 6.**

வெளியீடு : புரட்சிக்கனல் வெளியீடு, மஞ்சக்கொல்லை · சிதம்பரம் வட்டம்.

தொடக்கத்தில் மாந்தன் தன் அறியாமையாலும் இயலாமையாலும் தனக்கு வேருன, உயர்நிலையான இறைவனைக் கற்பித்துக் கொண்டு நிறைவடைந்தான். பின்னுல், அவனது அருள் பெறவும், அவனை அடையவும், அதற்குத் தன்னைச் செம்மைப்படுத்திக் கொள்ளவுமான வழிமுறைகளைப் படிப்படியாகக் கால, நில, சூழ் நிலை, அறிவு நிலைகளுக்கேற்ப ஏற்படுத்திக்கொண்டான். அதுவே சமயம் எனப்பட்டது. சமயத்தின் கொள்கைகள் மதம். மதங்களின் மாறுபாட்டிற்கேற்ப சமயங்களும் பலவாயின. பொதுவாக எல்லாச் சமயங்களும் நம்பிக்கையிலிருந்தே தொடங்குகின்றன. அறிவின் முழு வீச்சும் அங்கே செலுத்தப்படுவது தடுக்கப் பெறுகின்றது. 'மிக்கு சோதிக்க வேண்டா. சுடர்விட்டுளான் எங்கள் சோதி' என்று அடியவர் பாடுகின்ருர். 'Where Science ends, there relegion begins' என்பர். எனவே அறிவு நிலைக்கு அப்பாற்பட்டு நம்பிக்கையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டதே சமயம். எந்த நம்பிக்கையுமே மூடத்தனமானதுதான். இதில் மூடநம்பிக்கை என்று தனியே என்ன இருக்கிறது?

அறியாமையிலே பிறந்து, அறியாமையால் வளர்க்கப்பட்டு, அறியா மக்களிடம் பரப்பப்பட்டு வந்த சமயங்கள், கயவர்களின் கைகளில் மக்களைச் சுரண்டி அடிமை கொள்ளும் கருவியானது. அதில் சிறந்து நின்று, தமக்கென்று உயர்ந்த மெய்யறிவுக் கோட்பாடுகளைக் கொண்டிருந்த தமிழர்களை, **தமிழ்க் குமுகாயத்தை அதன் உண்மை நிலையிலிருந்து அடியோடு வீழ்த்திச் சாய்த்துச் சீரழித்த· அழித்துக்கொண்டிருக்கும் சமயமே இந்து மதம்.** மற்ற மதங்களுக்கிருப்பதைப் போன்ற தொடக்கமோ, முதல்வரோ, வரையறுத்த கொள்கைகளோ இன்றிக் காலத்தின் கருத்துகளையெல்லாம் தேவைக்கேற்ப விழுங்கிக் கொண்டு மக்களை விடாது அமுத்திக் கொண்டிருக்கிறது. தந்நல மூப்பர்கள் அதனை அழியாமல் காக்கத்

www.thamizham.net - Free E book No 7506

தொடர்ந்து முயல்கின்றனர். இன்று அப்படிக் காப்பதாகக் கூறி வரும் ஒருவர்தாம் இந்து மதத்தின் மூடத்தனங்களுக்கெல்லாம் முட்டுக் கொடுத்து **'அர்த்தமுள்ள இந்து மதம்'** என்றோர் நூலை எழுதியுள்ளார்.

அந்த மூடத்தனங்களின் குளறுபடிகளை எதிர்த்துச் சாடி எழுதப்பட்டதுதான் **மஞ்சை—வசந்தனின் 'அர்த்தமற்ற இந்து மதம்'.** நூலாசிரியர் இளைஞர், சீர்திருத்த நோக்கினர், சமய மூடத்தனங்களை மக்களிடமிருந்து விரட்ட வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர் என்பது நூலைப் பார்க்கும்போது தெரிகிறது. எனினும் பல பகுதிகள் கண்ணதாசனின் அறியாமைக்கு ஈடுகொடுப்பதாகவே இருக்கின்றன.

மக்களின் தரங்களுக்கேற்பவே எந்த அமைப்பும் பல நிலைகளைப் பெறும். கீழ்நிலை அறிவுடையோர்களுக்கான கற்பனைப் புராணக் குப்பைகளை, அவர்கள் நம்புவது போலவே நம்பி, தாக்கு தாக்கென்று தாக்குவது செத்த பாம்படிக்கும் செயலாகும், நகைப்பிற்குரியதே. இது படிப்போர்க்கு வேடிக்கையாகவும் கிளர்ச்சியூட்டுவதாயுமிருக்குமே யன்றி அறிவு விளக்கமளிக்காது. பல இடங்களில் ஆசிரியர் இதையே செய்கிறார். அதை விடுத்து, **அவ்வச் சமயங்களின் மெய்ப்பொருள் கொள்கைகள் என்று அவ்வச் சமய வாணர்கள் சொல்பவற்றை அறிவு நிலை நின்று மறுப்பதே முறையான மறுப்பாயிருக்கும்.** இறை மறுப்பாளர் (பகுத்தறிவாளர் என்று தம்மை அழைத்துக் கொள்வோர், எல்லா உயிரும் அறிவுடையனவாகவும் எல்லா மாந்தரும் விலங்கிலிருந்து வேறுபடும் பகுத்து அறியும் அறிவுடையவரா யிருக்கவும், 'கடவுள் இல்லை' என்பது மட்டுமே பகுத்தறிவு என்பது வேடிக்கைதான்.) என்போர் பெரும்பாலும் இந்நிலையிலேயே இருக்கின்றனர். **முழுதும் அறிவியல் சார்ந்த இயங்கியல் பொருள்முதலியல் அடிப்படையில் இவ்வாய்வை மேற்கொள்ளாமையே அதற்கான கரணியம்.**

எனினும், ஐயப்பன், சகுனம், சடங்குகள் பற்றியும், கண்ணதாசனின் கண்மூடித்தனங்கள், அர்த்தமற்ற பிற மதங்கள் போன்ற கட்டுரைகள் பொது மக்களை எண்ணத் தூண்டும். நூலாசிரியரின் நடை எடுத்துக்கொண்ட கருத்திற்கேற்ப அமையாமல் நீர்த்துப் போயிருக்கிறது. நூலின் இலக்கணப் பிழைகளும் மொழி நிலையில் இவரது அக்கறையின்மையையே காட்டுகிறது. அவை தவிர்க்கப் பட்டிருந்தால் சிறப்பாயிருக்கும். அறிவடிப்படையில் தருக்க நடைமுறைகளை ஏன் என்று கேட்கத் தூண்டும்படியாக இளையோர்க்கும் மக்களுக்கும் அறிவூட்டும் நூல்கள் வெளிவர வேண்டியது இன்று மிக இன்றியமையாதது. நூலாசிரியரின் ஆர்வமும் முயற்சியும் பாராட்டுதற்குரியன.

—**செம்பியன்.**

www.thamizham.net - Free E book No 7506

# தமிழாண்டும் தமிழர் திருநாளும்

தமிழர்க்குத் தமிழில் தொடர் ஆண்டு இல்லாத குறையை உணர்ந்த தமிழறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள் ஆகியோர் 1921-ஆம் ஆண்டு, சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் கூடி னூர்கள்; ஆராய்ந்தார்கள். திருவள்ளுவர் இயேசு கிறித்து பிறப்ப தற்கு 31 ஆண்டுகள் முன்பு பிறந்தவர் என்றும், அவர் பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவது என்றும் அதையே தமிழ் ஆண்டா கக் கொள்வது என்றும் முடிவு செய்தார்கள்.

திருவள்ளுவர் ஆண்டு என்பது சுறவ (தை) மாதத்தை முதல் மாதமாகவும், சிலை (மார்கழி) மாதத்தை இறுதி மாதமாகவும் வழக் கில் உள்ள ஏழு கிழமைகளையும் கொண்டது. (புதன் என்பதை **அறிவன்** என்றும், சனி என்பதை **காரி** என்றும் தூய தமிழில் வழங்குதல் வேண்டும்.) திருவள்ளுவர் ஆண்டுப் பிறப்பு சுறவ மாதம் முதல் நாள். திருவள்ளுவர் ஆண்டு கண்டுபிடிக்க ஆங்கில ஆண்டுடன் 31-ஐக் கூட்டுதல் வேண்டும். 1981 + 31 = 2012.

தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்று 1971-ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு அரசு நாட் குறிப்பிலும், 1972-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசிதழ், நாள்காட்டி ஆகிய வற்றிலும் நடைமுறைப் படுத்தி வருகிறது.

தமிழ் தமிழர், தமிழ்நாடு ஆகியவற்றின் நலனும் வளனும் நாடுவோர் அனைவரும் தவறுமலும் மறவாமலும் திருவள்ளுவர் ஆண்டு முறையைத் தம் வாழ்வில், வழக்கில் பின்பற்றுவதற்கு ஆவன செய்ய அன்புடன் வேண்டுகின்றேன்.

## தமிழர் திருநாள்

| | | |
|---|---|---|
| **சிலை** (மார்கழி) இறுதி நாள் : | | போகி விழா. |
| **சுறவம்** (தை) முதல் நாள் | (1) : | பொங்கல் புத்தாண்டு விழா |
| ,, இரண்டாம் நாள் | (2) : | திருவள்ளுவர் விழா. |
| ,, மூன்றும் நாள் | (3) : | உழவர் விழா. |
| ,, நான்காம் நாள் | (4) : | இயல் தமிழ் விழா. |
| ,, ஐந்தாம் நாள் | (5) : | இசைத் தமிழ் விழா, |
| ,, ஆறும் நாள் | (6) : | நாடகத் தமிழ் விழா. |

முறை செய்தோர். தமிழகப் புலவர் குழு, தமிழ்நாடு அரசு.

வெளியிட்டோர் : வ. வேம்பையன், அமைப்பாளர், கல்பாக்கம் அறிவியல் மன்றம், அணுவாற்றல் நகரியம்.

www.thamizham.net - Free E book No 7506

## 249. தனித் தமிழ்நாட்டுக் கொள்கையைத் தள்ளிப் போடுவதா?

நெஞ்சில் நிறைந்த பாவலரேறு ஐயா அவர்கட்கு வணக்கம். யான் இளைஞனாயினும் தாங்களின் எழுத்துகளை எண்ணிப் படித்து மூளை மடிப்புகளில் பதிய வைத்தவன் என்கின்ற வகையில் நீண்ட நாட்களாகச் சொல்ல நினைத்தவற்றை அண்மைக்காலத் தென்மொழி அன்பர்களின் கருத்துகளை நோட்டமிட்ட வகையில் இம் மடலை எழுதுகின்றேன். தாங்கட்கு உரியதென்கின்ற நிலையின்றி, தென்மொழி அன்பர்கட்கும் உரியதென்கின்ற நிலையால இம் மடலைத் தென்மொழியில் வெளியிடுங்கள்.

தென்மொழியின் வழியாக இவ்வடிமைத் தமிழகத்தின் காரிருளைப் போக்கக் கனல் கக்கும் சொற்களால் எவ்வளவோ எழுதியிருக்கின்றீர்கள். இவ்வெழுத்துகளால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் தென்மொழிப் பட்டாளத்தில் இருக்கின்றார்கள். தங்களுடைய எழுத்துகள் இந்தத் தமிழகத்தை வாழ்விக்கும் என்கின்ற வகையில் அவ்வெழுத்துகட்கு வணக்கமும் செலுத்துகின்றார்கள். இவர்கள் அனைவரும் தாங்களையே எல்லாமாக மதிக்கின்றார்கள். தங்களுடன் தொடக்கக் காலத்தில் கூடியிருந்தவர்களில் சிலர் தங்களைப் பிற்போக்காளர் என்றி கூறி விட்டுத் தனித்தும் சென்றிருக்கிறார்கள். எவர் எங்குச் சென்றாலும் தாங்கள் என்றைக்கும் மாறாத நிலையில் சோர்வின்றி இது நாள் வரை எழுதியும் பேசியும் வந்திருக்கின்றீர்கள். இனியும் எழுதுவீர்கள்; பேசுவீர்கள்.

எத்தனையோ வகையான கொள்கைகளும் குழப்பங்களும் நாட்டில் பெருகி வரும் இக் கால கட்டத்தில் நாமும் தம் கொள்கைகளை நடைமுறைபபடுத்த நம் தோழர்களோடு அணியமாகி மக்களியக்கமாக ஆக்கிப் பார்ப்போமே என்கின்ற வகையில் இப்பொழுது அறிக்கையும் விட்டிருக்கின்றீர்கள்! இவ்வறிக்கையினைக் கண்ணுற்ற தென்மொழி யன்பர்கள் விடுக்கும் கருத்துகளையும் கண்ணுற்றுக்கொண்டிருக்கின்றீர்கள். அவர்களின் கருத்து மாறுபாடுகட்கேற்பத் தென்மொழி தன்னுடைய கொள்கைகளை மாற்றிக் கொள்ளப் போவதில்லை.

தென்மொழியின் மூன்றாவது கொள்கையான பிரிவினைக் கொள்கையைப் பின்னுக்கு இழுத்து விட்டால் ஏனைய இரண்டு கொள்கைகட்கும் உயிர்ப்பு கிடையாது. அவையும் தாமாகப் பின்தள்ளி

www.thamizham.net - Free E book No 7506

வந்துவிடும். தென்மொழியை அழுந்திப் படித்தவர்கள் இதனைத் தெளிவாக உணர்வார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பார்த்தவர்கள் நமக்கு அறிவுரை பகர்வார்கள். அறிவுரை பகர்பவர்கள் அதிகம் பேராய் இருந்து விட்டால் என்ன செய்வது? யார் தாம் என்ன செய்து விட முடியும்?

பெருமைக்குரிய ஐயா! தமிழென்றும் தமிழரென்றும் தாம் பிழைக்க மட்டுமே பேசித் திரிகின்ற தலைவர்களும் தொண்டர்களும் பாழாய்ப் போகுமாறு தெய்வத் தீந்தமிழால் ஒரு நூறு அறப் பாடல்களைத் தென்மொழியில் எழுதிப் போடுங்கள்! தமிழுக்காகவும் தமிழர்க்காகவும் ஒரு நூறு ஒப்பாரிப் பாடல்களைத் தென்மொழியில் எழுதிப் போடுங்கள்! (முன்பு பாடிய பாடல் போதாது). இக் கயமைத் தமிழகம் விடியும்போது விடியட்டும்! அதன் பிறகு நடைமுறை உலகியல் கயமைகளைச் சாடி எழுத எழுதுகோல் தூக்காதீர்கள்! மெய்யறிவுப் பேரறிஞராகிய தாங்கள் எங்கட்கு மெய்யறிவைப் புகட்டும் வகையில் கண்ணை மூடிக்கொண்டு ஆயிரக்கணக்கான பக்கங்கட்கு எழுதிக் கொடுங்கள். உலகம் உள்ள வரையில் தங்கட்கு தங்களின் எழுத்து வாழ்வைத் தரட்டும். அதுவே தங்களுக்கும் போதும் எங்களுக்கும் போதும். அன்பு மாணவத் தம்பி,

— கு. இராசேந்திரன், க. மு., அண்ணாமலை நகர்.

## ௨௬௦. தமிழக முதல்வர் அவர்களின் திருப்பார்வைக்கு ஒரு மடல்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு, வணக்கம். கோடைக்கானலிலும் காரைக்குடியிலும் பல்கலைக் கழகங்கள் உருவாகி அரும்பணிபுரியும் வகையில் அடிப்படை வேலைகள் தொடங்கப் பெற்றுள்ள நற்செய்தி அறிந்து பெரிதும் மகிழ்வெய்துகிறேன்.

அனைத்து நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் நல்கும் பொருளுதவியோடு உருவாகும் உலகப் பல்கலைக் கழகத்திற்கு, உலகப் பொது நூலாகிய திருக்குறள் தந்த பெரும் புலவர் திருவள்ளுவர் பெயர் சூட்ட விரும்பி வேண்டுகிறேன். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்னும் மொழிவழியே உலகத் தமிழ் மாநாடு நிகழும் ஆண்டில், அயல்நாட்டு அறிஞர் பெருமக்கள் வருகைதரும் வேளையில், இந்த அறிவிப்பைச் செய்தருள்க. 'என்றும் புலராது யாணர் நாட் செல்லுகினும் நின்றலர்ந்து இன்பத்தேன் பிலிற்றும்' வள்ளுவம் இந்தியத் தேசிய ஏடாக மட்டுமல்லாமல், உலக இலக்கியமாகவும் துலங்க வழி வகுத்திடுக.

தமிழ்ப் பல்கலைக் கழகம் காரைக்குடியில் அமைவது பொருத்தம் மட்டுமன்றி, தமிழறிந்த பெருமக்கள் பலருடைய விருப்பமும் ஆகும். ஆண்டு முழுமையும் தமிழ் விழாக்களை விழுமிய வகையில்

www.thamizham.net - Free E book No 7506

நடத்தி வரும் பெருமைமிகு காரைக்குடி தமிழ் ஆராய்ச்சி நடுவம், கல்லூரி, மன்றங்கள் என்னும் பல்வேறு அடிப்படைக் கூறுகளுடன் வீறு கொண்டு தொண்டு புரிந்து வருகிறது. தமிழ்மொழியின் செம்மாந்த நிலையை எல்லோரும் ஏற்றுப் போற்றும் வகையில் மொழிக்கும் வாழ்வுக்கும இலக்கணம் எழுதிய விழுமிய பெரியார் தொல்காப்பியரே. ஒல்காப் புகழ்த் தொல்காப்பியரின் பெயரால் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுவது மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவது ஆகும்.

திருவள்ளுவர் உலகப் பல்கலைக் கழகமும், தொல்காப்பியர் தமிழ்ப பல்கலைக் கழகமும் புத்தாண்டில் பூத்திடவும் செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தல் சீராகச் செயலாற்றிடவும் தங்களைப் பணிவன்புடன் விரும்பி வேண்டுகிறேன்.

—பேரா. பா. வளன்அரசு, க. மு. பாளையங்கோட்டை

## காரறிவு கொண்டதுமேன் கண்ணதாசா?

—ஈரோடை இரட்டைப் பாவலர்கள் ஈவப்ப— தமிழ்க்குமரன்

காரறிவு கொண்டதுமேன் கண்ணதாசா! தமிழின்
சீரழிக்கத் தோன்றினையோ! தீங்கெண்ணிப்—பேரழியக்
கெட்டலைந்து வீணே கிறுக்கனைப்போல் பேசாதே!
பட்டழிந்து போவாய்நீ பார்!

வடமொழியார் தாள்பிடித்து வாழுவதோ நீயும்?
தடம்புரண்டு போனதுமேன்? சார்ந்து—மடமொழியைத்
தன்னீர்மை குன்றாதே தக்கபடி வாழந்திருப்பாய்
உன்சீர்மை காத்திடுக ஓர்ந்து!

நத்துவ தேனோநீ நாயாக இன்றந்தச்
செத்த வடமொழியைச் சீர்மையின்றி?—எத்தனைக்
காசுதந்தார் கூலியென? கண்ணியமில் லாதவனே!
மாசு தனையகற்றி வாழ்!

முத்தமிழின் நற்சுவையில் மூழ்கித் திளைத்தவனு
சொத்தை மொழிபோற்றச் சொல்கின்றாய்?—அத்தனையும்
நஞ்சென் றறியாயோ? நாடி யழிவாயோ?
கொஞ்சுவதேன் இன்றதனைக் கூறு?

பாடறிந்து நீயொழுகு! பண்பாட்டைக் காத்தொழுகு!
ஆடலெதற் காமோ? அரசவையின்—தேடரிய
பாவலனின் திண்மைமனப் பாங்கெங்கே? தாய்த்தமிழின்
காவலென்றே நன்றியினைக் காட்டு.

www.thamizham.net - Free E book No 7506

# செய்திகள்

**1. கழக எழுவள்ளல்கள் — வரலாற்றுத் தொடர் நிகழ்ச்சி ;**
**— சென்னைத் தொலைக்காட்சி நிலைய ஏற்பாடு :**

கடந்த 18-12-80 வியாழன் இரவு 8-15 மணி. 'வண்ணக் களஞ்சியம்' நிகழ்ச்சியில், சென்னைத் தொலைக் காட்சி நிலையத்தாரால் **கழக எழு வள்ளல்கள்** — என்னும் வரலாற்றுத் தொடர் நிகழ்ச்சியின் முதல் தொடர் நிகழ்த்தப் பெற்றது. **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களின், வரலாற்று ஆய்வு முன்னுரையை அடுத்து, இசைப் பேரரசி **சேலம் எசு. செயலட்சுமி** அவர்கள் சிறுபாணாற்றுப் படையில் உள்ள **வல்வில் ஓரி**யின் புகழ்ச்சி வரிகளைத் தமிழ்ப் பண்ணில் இசைத்துக் காட்டினார். அதைத் தொடர்ந்து பாவலரேறு அவர்கள் வல்வில் ஓரியின் வரலாற்றுச் சுருக்கத்தை எடுத்துரைத்தார்கள். அதன் பின்னர் நிலையக் கலைஞர்கள் 'நிகழ்ந்தவை — நிகழ்ந்த இடம்' என்னும் அமைப்பின்படி, சேலம் மாவட்டம் கொல்லிமலைக்கே சென்று படமெடுத்து வந்த வல்வில் ஓரியின் ஓரங்க நாடகக் காட்சி காட்டப் பெற்றது. நிகழ்ச்சி முன்னுரையில் பாவலரேறு அவர்கள் கழகக் காலத் தமிழகத்தின் வளப்பங்களையும், ஈகையறம் எவ்வாறு பேரறமாக எல்லாராலும் கடைப்பிடிக்கப் பெற்று வந்தது என்பது பற்றியும், அன்றிருந்த கழக எழு வள்ளல்கள் பற்றியும், அவர்களைக் கடைபெழு வள்ளல்கள் என்று சொல்லுதல் தவறு என்றும், ஏனெனில் முதல் எழு, இடையெழு வள்ளல்களாகக் குறிப்பிடப் பெறுவோரில் பலர் வாழ்ந்தே இல்லாத புராணக் கதைக் கற்பனை வள்ளல்கள் என்றும் அரிய ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் விளக்கியதும், பிறர் அற நூலுக்குத் தமிழர் அறம் குறிப்பாகத் திருக்குறள் அறம் எவ்வாது நேர் எதிரானது என்பது பற்றிக் கூறியதும் பெரிதும் குறிப்பிடத்தக்கனவாகும். கருத்துரைகளையும், காட்சிகளையும் நடுநிலையறிஞர் பலரும் வரவேற்று மகிழ்ந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அடுத்த நிகழ்ச்சி 15-1-81-இல் நடைபெறும்.

**2. பர். சி. இலக்குவனார் 71-ஆவது பிறந்த நாள் விழா :**

சென்ற 4-12-80 அன்று சென்னை, மயிலை, இரானடே நூலகத்தில், மேலவைத் துணைத் தலைவர் புலவர் திரு. **புலமைப்பித்தன்** அவர்கள் தலைமையில், பர். சி. **இலக்குவனார்** அவர்களின் 71-ஆவது பிறந்த நாள் விழா கொண்டாடப் பெற்றது. பர். **இரா. இளவரசு,** க. மு அவர்கள் வரவேற்புரையாற்றினார். திருவாளர்கள் டி. கே. சீனிவாசன், அமைச்சர் கா இராசா முகமது, பர். மெ. சுந்தரம், பர். ஔவை நடராசன், பாவலர் பொன்னடியான் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பாவலர் இ. க. முத்துசாமி நன்றியுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

www.thamizham.net - Free E book No 7506

**3. தென்மொழி அன்பர் குழு — திசம்பர் கூட்டம் :**

தென்மொழி அன்பர் குழுவின் திசம்பர் மாதக் கூட்டம் நளி 29 (14-12-80) ஞாயிறு மாலை 5-30 மணிக்கு வழக்கம்போல் சென்னைக் கடற்கரையில், கண்ணகி சிலை அருகில் நடைபெற்றது. முன்னைய கூட்டங்களை விட கூடுதலான அன்பர்கள் கலந்து கொண்டனர். அவ்வமையம் ஏரல், புலவர் திரு. **சிவசங்கு** அவர்களும் கலந்து கொண்டு தென்மொழி வளர்ச்சி பற்றி உணர்வுரையாற்றினார். கூட்டத்தில் தென்மொழி உறுப்பினர் கட்டணச் சேர்ப்பு அறிக்கைகள் விலைக்குத் தரப்பெற்றன. அன்பர்கள் தென்மொழி விரிவாக்கம் பற்றியும், வரும் மதுரை உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றும் பணிகள் பற்றியும் கருத்துகள் அறிவித்தார்கள். இரவு 7-30 மணியளவில் கூட்டம் இனிது முடிவுற்றது.

**4. தனித்தமிழ்க் கழகம் புதுச்சேரி — தீர்மானங்கள் :**

புதுவை, தனித்தமிழ்க்கழகச் செயற்குழு கடந்த 15-12-80-இல் கூடி நிறைவேற்றிய தீர்மானங்கள் வருமாறு : 1. தொடக்கத்தில் ஐந்தாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் பொழுது மறைமலையடிகளுக்கும் சிலை யெடுக்கப் பெறும் என்னும் முடிவிலிருந்து மாறுமல் இருந்து அவர் சிலையை நிறுவுமாறு தமிழக அரசைக் குழு கேட்டுக் கொள்கிறது. 2. மேலும், சென்னைக் கடற்கரை, பல்லாவரம் ஆகிய இடங்களிலும் அடிகளார் சிலை நிறுவப் பெறுதல் வேண்டும். 3. புதுவை நகர மன்றம் வழங்குகின்ற பிறப்பு இறப்புச் சான்றுகளைத் தமிழில் வழங்க வேண்டும்.

**13-12-80-ஆம் நாள் வரை நன்கொடை வரவுகள்**

| | | |
|---|---|---|
| 1. | 20-11-80 கு. ஞானசேகரன் — குரு. திலகவதி திருச்சி-14 திருமண அன்பளிப்பு | 5—00 |
| 2. | 25-12-80 மு. க. சங்கிலி, எலமனூர் — குழந்தை கயல்விழியின் 2-ஆம் அகவை நிறைவையொட்டி | 5—00 |
| 3. | 2-12-80 க. வேம்பையன், கல்பாக்கம் | 20—00 |
| 4. | 4-12-80 இரணியன், கோவை-திசம்பர் நன்கொடை | 10—00 |
| 5. | 9-12-80 ஏ. பி. திருமாலன், மலேசியா | 14—37 |
| 6. | 9-12-80 க.ப. அறவாணன் — தாயம்மாள் செனகல் — பெண் மகவு அருள்செங்கோர் பிறந்த நாள் நினைவாக | 25—00 |
| 7. | 13-12-80 மா. அரங்கராசன், மேகாலயா | 5—00 |
| 8. | 13-12-80 இரெ. காசிநாதன், மேகாலயா | 5—00 |
| 9. | ,, க. இராசேந்திரன், ப. சாம்பசிவம், மேகாலயா | 10—00 |

0 **நன்கொடை நல்கிய தூய தமிழ் நெஞ்சங்கட்கு நன்றி!**

0 **மணமக்கள் கு ஞானசேகரன — குரு திலகவதி குழந்தைகள் கயல்விழி அருள்செங்கோர் ஆகியோர்க்குத் தென்மொழியின் நிறைந்த வாழ்த்துகள்! அவர்கள் நீடூழி வாழ்க!**

www.thamizham.net - Free E book No 7506

பல்லாயிரம் தென்மொழி நெஞ்சங்களில், நானும் ஒருவன். வாழ்க தமிழ்! வளர்க, தமிழர் நலன்! மலர்க, தமிழர்தம் உரிமைகள்.
உண்மையுள்ள,

— துப்பாக்கி. தி. அன்பழகன், (க. இ), திருச்சி-16

0:823: பாவலரேறு அவர்களே! தாங்கள் சென்ற இதழில் வழங்கிய ஆசிரிய உரை அருமையிலும் அருமை! ஆயிர இலக்கம் பொன் பரிசு அளிக்கும் பெருமை பெற்றது. எனினும் அது நம் தமிழ்த் திருநாட்டில் செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகவன்றோ போகப் போகிறது. தமிழ்க் குமுகாயத்தின் மேன்மையை, நன்மையைக் கருதித் தாங்கள் கூறும் அறிவுரை இக் கேடு கெட்ட தமிழகத்தின்கண் சிந்திக்கவே மறந்து விட்டு, அறியாமை, மூடநம்பிக்கை, வறுமை இவற்றின் பிடியில் சிக்கித் திணறும் நம் மக்களே, அவர்கள் தேர்ந்தெடுத்த அரசை எங்ஙனம் சிந்திக்க வைக்கப் போகிறது? உங்களின் பொன்னுரைகள் போற்றிக் கடைபிடிக்கப்படும் நாளே பொன்னாள். அந்நாள் எந்நாளோ? அடுத்து, தங்களின் 'தென்மொழி இயக்கம்' அறிக்கை கண்டு இக் கடிதத்தை எழுதுகிறேன். தாங்கள் நாட்டு விடுதலைக்கான முயற்சியை இன்னும் சில ஆண்டுகள் தள்ளிப் போடுதல் நன்று. நாட்டு விடுதலைக்கு அடிப்படையான மொழி உணர்வு நம்மவர்களுக்கு இன்னும் ஊட்ட வேண்டிய பணி முதன்மையானது. தமிழ்நாட்டில் தமிழ் மொழி முதன்மை பெற, எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற நிலை அடைய இன்னும் அதிக அளவில் நம்போன்றோர் உழைத்திடுதல் வேண்டும். நம் போன்றோர் தாங்கள் - மட்டும் தூய தமிழைப் பயன்படுத்திக் கொண்டும் தூய தமிழ் இதழ்களைப் படித்துக் கொண்டும் இருந்து விட்டால் தமிழ் பரவி விடாது. அனைத்துத் துறைகளிலும் தமிழ் முதலிடம் பெறப் போராட்டம் நடத்த வேண்டும். மொழிஉரிமை கோரிப் போராடுவது என்பது குற்றமாகாது. இத்தகைய போராட்டத்தை அரசு ஊழியர் உள்பட அனைவரும் முன்னின்று போராட முடியும். எனவே தாங்கள் தமிழ் மொழியின் வாழ்விலும், வளர்ச்சியிலும் அக்கறையும், ஆர்வமும், பற்றும் கொண்ட தமிழர்களையும், தமிழர் அல்லாதாரையும் கூட ஒருங்கிணைத்து ஓர் அமைப்பினை ஏற்படுத்துங்கள். தங்கள் ஆணைக்கு ஆயிரமாயிரம் அன்புத் தமிழர்கள் அணியமாக உள்ளனர். இன்றே செயல்படுவீர்கள்!

— துரை. வெங்கடாசலம், க. இ; புதுச்சேரி-9.

0:824: பெருந்தகையீர்! தமிழனுடைய இயக்கங்கள் செத்துக் கொண்டு வரும் நேரத்தில் தமிழுணர்ச்சியை வளர்த்து உணர்வுகளைத் தூண்டி வருகிறீர்கள். இம் மாத ஆசிரிய உரை பத்தியின் பேராலும், மற்றவர்களுடைய உணர்வுகளையும் நலத்தையும் பொருட்படுத்தாத இழி நிலையையும், வாணவேடிக்கையில் பொருள் வீணடிப்பதையும் சிறப்பாகக் கண்டித்துள்ளது. மனம் மகிழ்வாக இருக்கிறது. ஒரு தன்னழிவு இயக்கம் தமிழுக்காவும் குமுகாய நலிவுகளுக்கும் துவக்கினால் கூட நல்லது ஐயா. தமிழனின் இன்றைய நிலை கண்ணீர் வடிக்கத் தக்கதாக உள்ள நிலை. என்று மாறுமோ?! நீவிர் நீடு வாழ்க!

— மா. அரசுமணி, கெசல்நாய்க்கன்பட்டி, சேலம்.

0:825: அன்புள்ள ஐயா, வணக்கம். தென்மொழி இயக்கம் முதல் அறிக்கையில் கொடுக்கப் பெற்ற வினா விடைப் படிவத்திற்குப்

www.thamizham.net - Free E book No 7506

போதுமான வரவேற்பில்லையென இரண்டாம் அறிக்கைக் கூறுகிறது. 'அச்சம்' 'தந்நல நோக்கு' என்ற சொற்கள் உறுத்தவே செய்கின்றன. 'பயனற்றவர்கள்' என்று உமிழ்வதும் சிறப்பாகத் தோன்றவில்லை. மதிப்பிற்குரிய பெருந்தகை பாவாணர் அவர்களே மனம் ஒய்ந்து,செயல் ஒய்ந்து இருப்பதாகத் தெரியவரும்போது கல்வியும், உலகியலறிவும் பெற்றிராத ஏழ்மை மிக்க தமிழ்க் குடியினரை நொந்து கொள்ள முடியுமா? (திரு. நா. இளமாறன் மடல் எண்246). நாட்டில் விலையுயர்வு, வேலை வாய்ப்பின்றி வளரும் வறுமை நிலை சோர்வையும் எதிர்கால வாழ்வின் மீது நம்பிக்கையின்மையையும் விளைத்துள்ளன. அறியாமை நீங்கித் தெளிவு பிறந்தால் நோக்கமும் விளைவுகளும் மகிழ்ச்சி யளிக்கும். காலம் கனிய பொறுத்திருந்தால் மட்டும் போதாது; நாள்தோறும் இனவுணர்வு மொழியுணர்வு தூண்டும் நிகழ்ச்சிகள் ஊர்தோறும் நிகழ்ந்து கொண்டே யிருக்க வேண்டும். சமயச் சார்பு குழுக்கள் கொண்டுள்ள முழு நேர ஊழியர்களைப் போல மொழியின நாட்டுணர்வு காப்பதற்கும் ஊழியர்களை அமர்த்தல் வேண்டும். பெருஞ் செல்வர்களை இதற்கோர் அறக் கட்டளை நிறுவி யுதவுமாறு கேட்கலாம். கிழமை யிதழொன்று தொடங்கி இளைஞர்களைக் கொண்டு மொழிப்பற்றும் விடுதலை யுணர்வும் தூண்டும் பாடல்களை—கட்டுரைகளை எழுதச் செய்து மக்களைப் பக்குவப்படுத்த வேண்டும். தங்களன்புள்ள,

— ச. கலியமூர்த்தி, காவேரி நகர்.

0:826: அன்புள்ள ஐயா, வணக்கம் பல. தங்கள் தென்மொழி மற்றும் தமிழ்ச்சிட்டு இதழ்களை இளமை முதல் படித்து வரும் எண்ணற்ற தமிழ் உள்ளங்களில் யானும் ஒருவன். ஒவ்வொரு திங்களும் தென்மொழியை வாங்கிப் பலமுறை படித்துப் பயின்று வருபவன் நான். தங்கள் தமிழ்ச்சிட்டு இதழ் என்னைத் தனித்தமிழ் நடையில் எழுதத் தூண்டியது. அதில் வருகிற பாடல்கள் என்னையும் ஒரு பாவியற்றும் பாவலனாக மாற்றியது என்பதைப் பெருமையுடனும், நன்றியுடனும் கூறிக் கொள்கிறேன். நான் 13 அகவையுடையவனாக இருந்தபொழுதே 'செந்தளிர்' என்ற கையெழுத்து, ஆண்டு மும்முறை இதழ் ஒன்றைத் தொடங்கிக் கல்லூரிப் படிப்பு முடியும் வரையிலும் நடத்தி வந்தேன். அவ்விதழில் முத்தமிழுக்கும் இடம் அளித்து வண்ணப் படங்களுடன் தனித்தமிழ் நடையை வளர்த்து வந்தேன். இடையில் வேலை காரணியமாகத் தமிழ் வளர்ச்சிப் பணியைத் தொடர இயலாவிட்டாலும், தமிழ் மேல் உள்ள காதல் காரணியமாகத் தென்மொழியையும், தமிழ்ச்சிட்டையும் தவற விடுவதில்லை. என்னிடம் தன்மான உணர்ச்சியும், தற்சிந்தனையும் பெருகியிருப்பதற்கும் இவ்விரண்டு இதழ்களே அடிப்படைக் காரணியங்கள். என்னுயிர் உள்ளவரை தமிழை மறக்கமாட்டேன். அதுபோல் அதன் இரு கண்களான தென்மொழியையும், தமிழ்ச்சிட்டையும் மறக்க மாட்டேன். தங்களைப் பற்றிய செய்தியை எங்கே கேள்வியுற்றாலும் என்னிடம் ஒரு பாசம் தோன்றுகிறது. ஓர் ஆர்வம் பெருகிறது. இதற்குக் காரணியம் தென்மொழிபால் எனக்குள்ள ஈடுபாடு.

— து. தருமராசன், கோலாலம்பூர்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை (தமிழகம்) 600005.
www.thamizham.net - Free E book No 7506